Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 23 (06-03-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 17

## கிராமசேவையாளர் பதவி மீண்டும் விண்ணப்பிக்குக

கிராம சேவகர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் பணம் செலுத்தாது மீண்டும் விண்ணப்பிக்க வேண்டுமென யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். கடந்த வருட பிற்பகுதியில் யாழ். மாவட்டத்திலிருந்து மேற்படி பதவிக்கு ஆயிரக் கணக்கானோர் விண்ணப்பித்தது தெரிந்தே. தற்போது இது தொடர்பாக அரசினால் புதிய விபரங்கள் கோரப்பட்டிருப்பதை அடுத்தே முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண் (8ஆம் பக்கம் பார்க்க)

## [ கட்டைக்காட்டில் பயங்கர சண்டை ]

# வெளிவந்த படையணி சிதறடிப்பு

# 21 இராணுவம் பலி: பலர் படுகாயம்

## இன்று மக்கள் அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் நேற்று நிகழ்ந்தமோதலில்வீரச்சாவை தழுவிக்கொண்ட மூன்று வீர வேங்கைகளினதும் புகழுடல்கள் இன்று காலை எட்டு மணிக்கு சாவகச்சேரியிலும் பகல் பதினொரு மணிக்கு மானிப்பாயிலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் இந்த இரு இடங்களிலும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

## அராலி நோக்கி எறிகணை

(அராலி)

அராலி தெற்குப் பகுதியிலுள்ள பொதுமக்கள் குடியிருப்புகள் மீது நேற்று முன் தினம் மண்டைதீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

அராலி தெற்கு கிராவோலைச் சந்திப் பகுதியிலிருந்து களவத்துறை வைரவர் கோவிலடி வரையுள்ளபகுதியிலேயே தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மூன்றுக்கு மேற்பட்ட எறிகணைகள் இப்பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி மேம்பாடு குறித்து அறிஞர்கள் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

கல்வியில் ஆர்வம்கொண்ட திணைக்கள அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர் இன்னும் சில கல்விமான்கள் கடந்த சில மாதங்களாக ''பாலம்''பணிமனையில் ஒன்று கூடி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையை உருவாக்கிக் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களைப் பற்றி சிந்தித்து வருகின்றார்கள்.

இந்த ஒன்றுகூடலின் போது எமது மாணவர்கள் கற்று முடிக்கவேண்டிய பாடத் திட்டத்தை முடிக்கவேண்டும் என்ற ஒரேயொரு காரணத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டிதர் குடியிருப்பில் வித்தியாசாலை திறப்பு

(அலுவலக நிருபர்)

கெற்பேலி பண்டிதர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட கமலாசனி வித்தியா சாலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இப்பண்டிதர் குடியிருப்பில் கடந்த இரு மாதங்களில் தீவகப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த 600 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. கடந்த பதினைந்து நாட்களில் 600 மாணவர்கள் கல்வி பயிலக் கூடியதாக பதினொரு வகுப்பறைகளைக் கொண்டதாக இப்பாடசாலை அமைக்கப்பட்டுள்ளதுடன் தளபாட (8 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையிடம் சிக்கிய 121 மீனவரின் விபரம்

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினராலும் கடற்படையினராலும் கடந்த வருடங்களில் கைது செய்யப்பட்ட நூற்றி இருபத்தொரு மீனவர்களது பெயர் விபரங்கள் கூட்டுப்படைத் தலைமையகத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் பற்றிய விபரங்களை அறிவதில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தீவிரமாக ஈடுபட்டு வந்தது தெரிந்ததே. தற்போது சிறிலங்கா (6 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் அவசரம் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சகல பிரிவு இரத்தங்களும் முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் உடனடியாக முன்வந்து இரத்ததானம் வழங்குமாறு கேட்கப்படுகின்றனர். (ச)

## புலிகளின் மற்றுமொரு வீரகாவியம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டு இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை வெளியேறிய சிங்கள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. இராணுவ அணியை விடுதலைப் புலிகள் வழி மடக்கித் தாக்குதல் நடத்தியதில் வெளிவந்த இராணுவ அணி சிதறியது. அகோர விமானக் குண்டு வீச்சின் மத்தியிலும் பல மணி நேரம் நீடித்த இச் சண்டையில், இருபத்தியொன்றிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம அடைந்தனர். கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களையும் விட்டு விட்டு இராணுவத்தினர் ஓட்டம் எடுத்தனர்.

புலிகள் படைத்த மற்றுமொரு வீர காவியத்தில் மூன்று புலிகள் களப்பலியாகினர்.

நேற்றுக்காலை 6.00 மணியளவில் கட்டைக்காட்டு இராணுவ முகாமிலிருந்து நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேற முற்பட்ட போதே இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அகோர குண்டுவீச்சு மத்தியில் தொடர்ந்த உக்கிர மோதல்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் சண்டையின் போது அப்பகுதியில் அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலும், எறிகணை வீச்சும் இடம் பெற்றன.

காலை 6 00 மணிக்கு மோதல் ஆரம்பித்ததைத் (8 ஆம் பக்கம் பர்க்க)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற உக்கிர மோதலில் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் அள்ளப்பட்டன. அள்ளப்பட்ட நவீன ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

★ ஜி. பி. எம். ஜி. - 01
★ ஆர். பி. ஜி. - 01
★ ஏ. கே. எல். எம். ஜி - 02
★ ரி 81ரகதுப்பாக்கிகள் - 06
★ ரி.56-2 ரக துப்பாக்கிகள் - 05
★ ரி.56ரகதுப்பாக்கிகள் - 05
★ நேற்ரோரவைகள் - 100
★ ஐ.எம்.ரவைகள் - 6000
★ ஏ.கே.மகசீன் - 41
★ ஜே ஆர்.கைக்குண்டு - 03
★ ஆர் பி.ஜி.செல்கள் - 03
★ ஏ. கே. லிங்குடன் ரவை - 287
★ ஏ.கே. றம்மகசீன் - 03
★ ஜி. பி. எம் ஜி மேலதிக சுடுகுழல் - 01
★ ஆர்.பி ஜி.புறப்ளர் - 02
★ செற் - 01
★ ஏ.கே.கோல்சர் - 06
★ செற் கோல்சர் - 01
★ மேலதிக பற்றி - 01
★ கெல்மட் - 11
★ தண்ணீர்கான் - 04
★ கிற்பாக் - 10
★ ரெயின் கோட் - 01
★ சப்பாத்து - 04 சோடி

## 3 வேங்கைகள் களப்பலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற உக்கிரமோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று வேங்கைகள்களப்பலியாகினர்.

பலமணிநேரம் நடைபெற்ற இம்மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் கலையான் அல்லது நித்தியா (சின்னப்பிள்ளை பாஸ்கரன் - இத்தாவில், பளை), வீரபாண்டியன் அல்லது யூரியன் (இம்மானுவேல் தெய்வேந்திரம் - குருநகர் தொடர்மாடி), வேந்தன் அல்லது வின்சன் (அமிர்தநாதன் அலஸ்ரின் - செம்பியன்பற்று முகாம்) ஆகிய வேங்கைகளே வீரச் சாவைத் தழுவிக்கொண்டவர்களாவர்.

இம்மூன்றுவீரவேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 16 சடலங்கள் மீட்பு

கட்டைக்காட்டில் நேற்று வெளியேற முயன்ற இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது இறந்த இராணுவத்தினரின் 16 சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்படாத நிலையில் மேலும்சில இராணுவத்தினரின் சடலங்கள்அப்பகுதியில் காணப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

*Graduates / Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs. 2,500/- shall be paid.*

*The duration for this fellowship shallbe one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at anytime if the prokent is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.*

*The closing date for applications will be* 30.04.1992

*Registrar*
*University of Jaffna.*

(சி-4008)

## கண்காட்சியும் விற்பனையும்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர்அபிவிருத்தி நிலையத்தால் உள்ளூர்உற்பத்திப் பொருள்களின் கண் காட்சியும் விற்பனையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இது யாழ். இந்துக்கல்லூரியில் நாளை 7 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படும்,

7 ஆம், 8 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறும்.

இந்தக்கண்காட்சியில்மகளிர் குழுக்கள் உட்பட23நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன.

## UNIVERSITY OF JAFFNA

**M. Sc. Biotechnology**

*"Graduates in chemical, Biological, Medical, Dental, Verterinary. Agricultural and Engineering Sciences will be considered. Forward application with biodata. All applicants will be required to sit for a qualifing examination and a vica. Address correspondence to Registrar, University of Jaffna, Jaffna"*

**Closing date**
**16th of March 1992.**

(சி-4007)

## வரி விளம்பரம்

### புலமைப்பரிசில்

*(Paper Class)*

1991ஆம்ஆண்டிற்குரிய புலமைப்பரிசில் (ஆண்டு 6) *paper Class* சனி ஞாயிறு 9-00 11-00 நடைபெறும் ஆரம்பம் 07.03.92 சனி9-00குறிப்பிட்டளவு மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர்முற்கூட்டியே பதிவு செய்யவும்.புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2264)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### ஆடைகள்/துணிகள் சலவை செய்து வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு, மாதத்தில் இரு தடவைகள் விஜயம் செய்து, ஆடைகள்/துணிகள் சலவை செய்து விநியோகம் செய்ய சலவைத் தொழிலாளரின் சேவை கோரப்படுகின்றது.

மேற்படி சேவைக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் 13.03.92 வரை அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 13.03.92 பி.ப. 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

-பதிவாளர்.

(சி-4010)

## இன்று முதல் ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்,
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணிக்கும்
காண்பிக்கப்படுகின்றது.

**FIVE FOR HELL**

(நரகத்திற்கு ஐவர்)
(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]

## 91-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 07 | 07 |
| — | — |
| 01 | 12 |
| — | — |
| 1969 | 1991 |

### 2ஆம் லெப்டினன்ட் அருளாளன்

(சீலன்)

(இரத்தினம் உதயகுமார்)


எமது மகன் இ. உதயகுமார் (அருளாளன் - சீலன்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 6.3.92 இன்றுவெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் சகல போராளிகளும் மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

3 ஆம் சந்தி,
கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.

(2256)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள்

(யாழ். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை அச்சக அதிபர்)

மலர்வு: 01 - 08 - 1911
உதிர்வு: 06 - 02 - 1992

"காலத்தை வென்ற புகழ் உன்னுடையது
காலமெலாம் நினைத்திருப்போம் உம்மை ஐயா"!

எங்கள் இல்லத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து சொண்டோருக்கும், பத்திரிகைகள் பிரசுரங்கள் வாயிலாகக் கண்ணீர் அஞ்சலி வெளிவிட்டவர்களுக்கும், மலர் மாலைகள், மலர் வளையங்கள் சார்த்தி அஞ்சலி செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், வேறுவழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

07. 03. 92 சனிக்கிழமை காலை 10 மணிக்கு எமதில்லத்தில் நிகழும் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63, பீ. ஏ. தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(2265)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-06

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை, கன்னியா, மாங்காய் ஊற்றுப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தொலைத் தொடர்பு ஊழியர்.

மன்னார்/ அடம்பன் கன்னாட்டிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாறில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**அறிவழகன்**

தமிழீழக் கடற்பரப்பில் (வளலாய்) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜீவா** [காஞ்சியப்பா ஜெயக்குமார் நிர்மலகுமார் - மயிலியதனை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4006)

யாழ்ப்பாணம்




'விடுதலைப் புலிகள் வித்தியாசமானவர்கள்' - திலீபனின் உரைகளில் இந்தக் குறிப்பு அடிக்கடி இடம் பெறும். இந்த வித்தியாசமானவர்களில் வித்தியாசமானவனாகத்திகழ்ந்தவன் தான்ரட்ணா. 'அவனுக்கு ஊருலகத்திலுள்ள கிழவிகள் முழுக்கத் தெரியும்' என்று அவனைப் பற்றி நினைவு கூர்ந்தான் அவனுடன் நெருங்கிப் பழகிய போராளி ஒருவன். எமது காற்றையே அசுத்தப்படுத்தும் வகையில் இந்திய இராணுவத்தினர் நிறைந்திருந்த காலத்தில் அவன் வாழ்ந்த வாழ்வுதுணிகரமிக்கதும், சுவாரஸ்யம் நிறைந்ததுமாகும்.

கூப்பிடு தொலைவில் இந்திய இராணுவ முகாம்கள் -ஆனால் இவன் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை- இவன் மட்டுமல்ல இவனால் ஒருமையில் அழைக்கப்படும் கிழவிகளும்தான். ஒரு நாள் அரியாலைப் பகுதியில் இவன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். மிகக்கிட்டிய தூரத்தில் இந்திய இராணுவத்தினர்- இராணுவத்தினரைக் கண்டதும் இவன் சைக்கிளைத் திருப்பிக் கொண்டுபோனான். அவர்கள் இவனைக் கண்டதும் சரமாரியாகச் சுட்டனர். இவனோ சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடமுயற்சிக்கவில்லை. சாவகாசமாகப்போய்க்கொண்டிருந்தான். இந்திய இராணுவத்தினரின் எதிரிலேயே 'சைக்கிளைப் போட்டுட்டு கீழே விழுந்து படடா' என்று அறிவுறுத்தினர் வயோதிடர்கள். இவன் போட்டால்தானே? 'அவன்ர சூடு எங்கை பிடிக்கிறது' - அலட்சியமாகப் பதில் கூறியபடியே அவர்களிடமிருந்து விடைபெற்றான் அவன்.

'டேய்தம்பி' 'ரட்ணா' இப்படித்தான் உரிமையோடு அழைப்பார்கள் அவனுக்குப் பிரியமான கிழவிகள் நடுத்தெருவில் நாட்டு நிலைமைகளை அலசிக் கொள்வார்கள்.

ஒரு சமயம் இவன் செல்லும் பாதையில் அவனுக்கென்றேபதுங்கியிருந்து காத்து நின்றனர் இந்திய இராணுவத்தினர். அவ்வழியால் ஒரு வயோதிபத்தம்பதிகள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் பதுங்கியிருந்ததை அந்த மூதாட்டி கண்டு விட்டார். ஆனால் தான் அவர்களைக் கண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. மிகச்சாதரணாகவே போய்க்கொண்டிருந்தார். இவன் எதிரே வந்து விடக்கூடாது என்று கடவுளை வேண்டிக் கொண்டு செல்கையில் தூரத்தே இவன் வந்து கொண்டிருந்தான். சாவகாசமாக சைக்கிளில் பாடிக் கொண்டு வந்த இவனை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக நடையின் வேகத்தை அதிகரித்துக் கொண்டு சென்றார் அம் மூதாட்டி. ஒரு சந்தியை அண்டியதும் அதில் நின்று இவனை மறித்து 'டேய், கடன் காசும் தராமல் எங்கை போறாய்' என்று இவனது சேட்டைப் பிடித்திழுத்து ஒரு பாதைக்குள் கொண்டு சென்று 'ஆமி படுத்துக் கிடக்கிறான் திரும்பிப் போடா' என்று கூறினார். இவனும் தப்பி விட்டான்.

இவனை எதிர்பார்த்து எங்கள் புழுதியின் மணத்தைக் குடித்துக் கொண்டிருந்த இந்தியப் படையினர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மூதாட்டி ஒரு நக்கல் சிரிப்புடன் சென்றுவிட்டார். இவ்வாறு இந்திய இராணுவத்தையே படாத பாடு படுத்தினர் இந்த மூதாட்டிகள். எல்லாம் இவன் மீதுள்ள அன்பினால்தான்.

தனது நண்பர்களைச் சீண்டுவது இவனுக்குப் பிடித்தமான காரியம். அதிலும் அல்பேட்டைச் சீண்டுவதில் ஒரு தனி இன்பம் இவனுக்கு. முகம் முழுக்க பருக்கள் நிறைந்திருக்கும் அல்பேட் கண்ணாடியில் பார்த்து தனது பருக்களை தட்டிக் கொண்டிருந்தால் தான் தங்கியிருக்கும் வீட்டுக்காரர்களை கூட்டி வந்து 'அழகான மாப்பிள்ளை ஒருத்தர் பருத் தட்டுகிறார் பாருங்கோ' என்று காட்டுவான். அல்லது ஒரு சினிமா பாட்டின் வரிகளை மாற்றி 'இது முகமோ இல்லை- என்னைக் கொல்ல வந்த பேயோ'? என்று பாடுவான். இவனை எதிர்த்து ஏதாவது சொன்னால் இவன் பதிலுக்கு இன்னும் வேறு விதத்தில் அவமானப்படுத்தி விடுவான் என்பதால் அவனும் எதுவும் கதைப்பதில்லை. சிரித்தபடியே விலகி விடுவான்.

எந்தளவுக்கு இவன் தனது நண்பர்களைச் சீண்டுவானோ அந்தளவுக்கு அவர்கள் மீதும் இந்தப் போராட்டத்தின் மீதும் பற்றுடையவன். தனது நண்பர்களைப் பற்றி யாராவது குறையாகச் சொன்னால் பொறுக்க மாட்டான். கொதித்தெழுந்து தர்க்கப்படுவான். அதுபோல் அவர்களுக்கு ஏதாவது ஆபத்தென்றல் இவன் சும்மா இருக்க மாட்டான். இந்தியப்படையினரை தொல்லைப்படுத்தி அவர்களை மீட்டு விடுவான். இதனால் தனக்கு விளையக் கூடிய ஆபத்துக்களைப்பற்றி யோசிக்க மாட்டான். ஒரு சமயம் இனி எங்கே புலிகள் வரப்போகிறார்கள்? என்ற தைரியத்தில் ஒரு குடிகாரப் போக்கிரி ' ஓ. மரணித்த வீரனே''. . என்ற பாடலில் வரும் வரிகளை மாற்றி ' உன் கடைசித் தங்கச்சியை எனக்குத்தா'' என கிண்டலாகப் பாடிக்கொண்டு போனபோது அன்றுதான் இவனது வாழ்நாளில் உச்சக்கட்ட ஆத்திரம் வந்தது இவனுக்கு- சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு ஒரு கட்டையை எடுத்து ஆத்திரம் தீரும்வரை அடித்தான். இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நடைபெறும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் இவர்களை மன்னிக்க அவன் தயாராக இல்லை.

தொடர்ச்சியாக சில நாள் அரியாலைப் பகுதிகள் முற்றுகையிடப்பட்டுக் கொண்டிருந்தவேளை அங்கிருந்து வெளியேறிய இவனும், இவனது நண்பர்களும் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தனர். ஆனாலும் இவனுக்கு அரியாலைக்கு செல்ல வேண்டும் என்று ஆசை. நிலைமையைப் பார்த்துக்கொண்டு வருவதாகக்கூறி நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கு புறப்பட்டான். இடுப்பில் உள்ள ஒரேயொரு குண்டு தான் அவனது ஆயுதம். போகும் வழியில் நல்லூரடியில் எமது ஆதரவாளர் ஒருவரின் இல்லம் இருந்தது. அந்த இல்லத்திற்கெதிரே இரண்டு ஈ. பி. ஆர். எல். எப். இனர் குறிப்பிட்ட எமது ஆதரவாளரை சுடக் காத்திருந்தனர். இருவரும் தலா ஒவ்வொரு பிஸ்ரலை தமது சட்டைக்குள் மறைத்தபடியே நின்றனர். இதை அவதானித்த பொது மக்கள் அவ் வழியால் சென்ற இவனை மறித்து விஷயத்தைச் சொன்னார்கள். அவ்வளவு தான் இவனுக்கு கடுமையான ஆத்திரம் வந்தது. அவர்களை நோக்கிச் சென்றான் ''டேய் இஞ்சை வாங்கடா'' என்று கோபத்துடன் கூப்பிட்டான். உடனே அவர்கள் இருவரும் பிஸ்டலை வெளியில் எடுத்தபடி வந்தனர் பிஸ்டலைக் கண்டதும் இவன் தனது கைக்குண்டை எடுத்து அதன் கிளிப்பை கழற்றி விட்டு அவர்களை நெருங்கினான். கைக்குண்டுடன் நின்றவனைப் பார்த்து பிஸ்டலுடன் நின்றவர்கள் ஓடினர். இவன் கைக்குண்டை வீசினான். ஆனால் அது வெடிக்கவில்லை. கைக்குண்டின் ஓசையை நினைத்துப் பீதியுடன் ஓடிய அவர்கள் திரும்பிப் பார்த்தபோது இவனிடம் வேறு குண்டுகள் இல்லை என்ற உண்மை தெரிய வந்தது. உடனே மீண்டும் ''வீரம்'' வந்து இவனை நோக்கி வந்தனர். இவன் அவர்களிடமிருந்து தப்பி வந்தான். ஆனாலும் இவனுக்குள் ஒரு ஆத்திரம் ''இவங்களுக்கு நான் பயப்படுகிறதா'' என்று நேரே நண்பர்கள் தங்கியிருந்த இடத்திற்கு சென்றான். அவசர அவசரமாக அவர்களை அழைத்து வந்தான். அவர்களும் அவனது அவசரத்தைப் பார்த்து உடன் புறப்பட்டனர். போகும் வழியில் தான் இவன் விஷயத்தைச் சொன்னான். இதற்குள் அந்தப் பகுதியை இந்தியப் படையினர் முற்றுகையிட்டு விட்டனர்- அவர்களுடன் குறிப்பிட்ட இரு பிஸ்டல்கார ஈ. பி. ஆர். எல். எவ்வினரும்.


லெப். ரட்ணா

நண்பர்கள் அறு பேருக்கும் இவனே வழிகாட்டியாகச் சென்றான். இவர்களிடம் கைக்குண்டுகள் தவிர ஒரு ஏ. கே. ரக றைபிள், ஒரு எஸ். எம். ஜி. ஒரு றிவால்வர், ஒரு பிஸ்ரல் ஆகிய ஆயுதங்கள் மட்டுமே இருந்தன. முற்றுகையிட்ட இந்தியப் படையினர் வேலிகளுக்குபின்னாலும்மதில்களுக்கு பின்னாலும் மறைந்திருந்தனர். இவர்கள் சென்ற வழியில் பொதுமக்களைக் காணவில்லை. இவனது கண்கள் குறிப்பிட்ட ஈ. பி. ஆர். எல். எப். வினரைத் தேடிக் கொண்டிருந்தன. அவர்களைக் காணவில்லை. ஆனால் அவர்கள் இவனைக் கண்டு விட்டனர். இந்திய இராணுவத்தினர் நிற்கும் தைரியத்தில் 'டேய்'' என்றவாறே முன்னே வந்தனர்அவர்கள். இவன் மீண்டும் கைக்குண்டுடன் அவர்களைநோக்கிச் சென்றான். அப்போது தான் அவர்கள் பின்னால் வந்த இவனது நண்பர்களை கண்டனர். அவ்வளவு தான் - நூற்றுக்கணக்கான இந்தியப்படையினர் தம்முடன் நிற்கின்றனர் என்பதை மறந்து ''எங்களுக்கெல்லாம் ரோஷம்வருவதறகு என்ன நியாயமுண்டு?'' என்று நினைத்தவாறே ஆளுக்கொரு பக்கமாய் ஓடினர். இவர்களும் இரு பகுதியாய்ப் பிரிந்து அவர்களைத் துரத்தினர். அப்போது இவன் சென்ற பகுதியில் மறைந்திருந்த இந்திய இராணுவத்தினர் இவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். அம்மோதலில் இளங்கோ என்ற இவனது நண்பன் வீரச்சாவை தழுவினார். அங்கிருந்து தப்பிய இவன் அரியாலைக்கு போன போது அங்கே தனது வேறு இரு நண்பர்கள் வந்திருப்பதைக் கண்டான். உடனே அவர்களை அழைத்துக் கொண்டு நல்லூரை நோக்கி விரைந்தான்.

இதற்கிடையில் ஒரு பக்கமாக ஈ. பி. ஆர். எல். எவ். 'வீரரை'' துரத்திக் கொண்டு போன அடுதத பிரிவினர் அவனைச்சுட்டு அவனது பிஸ்டலையும் கைப்பற்றினர். இவர்கள் சாவகாசமாக திலீபன் உண்ணாவிரதமிருந்த மேடை இருந்த பகுதியை நோக்கிச் சென்றபோது அவர்கள் மீது மறைந்திருந்த இந்தியப் படையினர் தாக்குதல் தொடுத்தனர். இவர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தினர் காயமுற்ற நிலையிலும் ஒரு வீரன் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தான். இதற்குள் முற்றுகை மேலும் பலமாகியது.

இச்சமயத்தில் நல்லூரை நோக்கி வந்த ரட்ணாவும் அவனது இருநண்பர்களும் நல்லூர் ஆலயத்தின் பின்னால் குவிந்திருந்த படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர் இதில் இருஇந்தியப்படையினர்மாண்டனர். மோதல் நடைபெறுகையில் முற்றுகைக்குள்ளிருந்தவர்கள் தப்பி விட்டனர். இந்த மோதல் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தியப்படையின் கொடி ஓங்கியிருந்த காலத்தில் நிகழ்ந்த இந்த துணிகரத்தாக்குதலுக்கு முக்கியத்துவம் அளித்து பலநிமிட நேரம் செய்தியும் ஆய்வுரைக் கண்ணோட்டமும் ஒலி பரப்பியது பி. பி. சி:

இதைப் போலவே தான் நாயன்மார்கட்டிலும் இந்தியப்படையினரின் முற்றுகைகுள் அகப்பட்ட தனது நண்பர்களைக் காப்பாற்ற அங்கு விரைந்து சென்று தாக்குதல் தொடுத்தவன் இவன். இந்தியப்படையினரின் முற்றுகையை திசை திருப்பும் வகையில் நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதல்கள் அனைவராலும் மிகவும் பாராட்டப்பட்டன,

மோதல் - அது இவனுக்கு வெல்லக்கட்டி. ஒருசமயம் சில நண்பர்களுடன் குருநகரில் இருந்த வரதராசப்பெருமாளின் இல்லத்துக்குகுண்டுவைக்கச்சென்றான் இவன். இந்தியப் படையினரின் பல முகாம்களைத்தாண்டி மோட்டார் வண்டியில் சென்றான். வீடு கூடச் சரியாகத் தெரியாது, எனினும் விசாரித்து வீட்டைக் கண்டு பிடித்து அதற்குள் குண்டைவைத்துவெடிக்கவைக்க முயற்சித்தான் அதுவெடிக்கவேயில்லை. பல்வேறு தடவைகள்முயற்சித்தும் பலனளிக்கவில்லை. இதற்குள் அப்பகுதியை இந்தியப் படையினர் முற்றுகையிட்டனர் மோதல் தொடங்கியது. அனைவரும் சிதறி ஓட வேண்டிய நிலை

இவனது நண்பர்கள் தப்பி விட்டனர். இவன் வரவில்லை ஆனால் இவனது துப்பாக்கி வேட்டுக்கள் இந்தியப்படையினரைச் சந்தித்துக் கொண்டிருந்தன. மோதல் நீடித்துக் கொண்டிருக்கவே எல்லா முகாம்களிலும் இருந்தும் அப்பகுதியை நோக்கி இந்தியப் படையினர் விரைந்தனர். பிற்பகல் 4-30 க்கு தொடங்கிய மோதல் மாலை 7-30 மணி வரை நீடித்தது. அங்கிருந்து தப்பி தனது நண்பர்களிடம் சென்றான் இவன். ''டேய் நீ முடிஞ்சாயெண்டு தான்டா நினைச்சம்'' என்று வியப்புடன் சொன்ன நண்பர்களுக்கு ''இவங்களிட்ட சூடு வாங்கிச் சாகிறதா'' என சிரித்தபடியே பதில் கூறினான் இவன்

இன்னொரு சமயம் அரியாலையில் ஒரு ஆதரவாளருடன் இவன் சென்று கொண்டிருக்கையில் ''அரியாலையில் ஏரியாச் செய்கிறான்'' என்று குறிப்பிடுமளவுக்கு பிரபல்யம் பெற்றிருந்த மேஜர் முத்தண்ணா இவனைக் கட்டிப் பிடித்தான்' உடனே ஒரு தள்ளு குப்புறக் கீழே விழுந்தார் முத்தண்ணா- இந்தியாவின் திமிர் போலவே.

பல முற்றுகைக்குள்ளால் தப்பிய இவன்-பலமுற்றுகைக்குள் தனது நண்பர்களைக்காப்பாற்றியஇவன்-கடைசியில் ஒரு முற்றுகைக்குள் தானாகச்சிக்குண்டான். அந்தக்காலப்பகுதியில் நடந்த நீண்ட நேரச் சண்டைகளில்ஒன்றுஅது. இரவு இவன் தங்கியிருந்த பகுதிக்கு அப்பால் உள்ள பகுதிகளை இந்தியப்படையினர் முற்றுகையிட்டிருந்தனர். ஆனா இவன் தான் தங்கியிருந்த பகுதியைத் தான் முற்றுகையிட்டிருக்கின் கின்றனர் என தவறாகக் கணிப்பிட்டு சண்டை செய்தபடியே முற்றுகைக்குள்ளாகியிருந்த பகுதிக்குள் போய்விட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ராமன் பேரனைக் கொன்ற ராவணனின் பேரன்

''நான் ராஜீவ் காந்தி கொலையைக் கண்டிக்கிறேன். இருந்தாலும் எனக்கு இதிலே மகிழ்ச்சி இருக்கின்றது. ராமன் ராவணனைக் கொன்றது இராமாயணம். முருகன் சூரனைக் கொன்ற கதை திருச்செந்தூரில் நடந்தது. இரணியனை நரசிம்மன் கொன்ற கதை உங்கள் புராணத்தில் இருக்கின்றது. ஆக இதுவரை நீங்கள் எங்களைக் கொன்றிருக்கிறீர்கள். நண்பர்களே, இப்பொழுது ராவணனின் பேரன், ராமனின் பேரனைக் கொன்றிருக்கிறான். இதிலே எனக்குப் பெருமைதான்.

ராஜீவ் கொலையை ஒரு கொலை என்ற அளவிற்கு நான் கண்டிக்கிறேன். என் இனத்தின் வரலாறு என்ற அளவில் நான் பெருமைப் படுகின்றேன்.''

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அருள்மொழி 'அடக்குமுறைச் சட்ட எதிர்ப்புக்குழு கூட்டு இயக்கம்' என்ற பெயரில், கடந்த டிசம்பர் 22ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் ஒருபகுதி.

## காவல் தெய்வம்

உறைய வைக்கும்
மாசிப் பனியும்
ஊசியாய்த் தைக்கும்
நுளம்புகள் கூட்டமும்
தோற்றுப் போயின,
அவனது கண்களை
இமைக்கச் செய்வதில்

சீறிப்பாயும் துப்பாக்கி ரவைகள்
காற்றினைக் கிழித்து
சறுக்கிடும் ஓசையும்,
படபட வென்றடிக்கும்
உலங்கு வானூர்தியின்
இறக்கையின் அசைப்பும்
இரவின் அமைதியை
குலைத்துக் கொண்டன.

நிலவினைப்பழிக்கும்
அவனது முகத்தில்
காலைக் கதிரவன்
ஒளியினில் துலங்கும்
பூசணி மயிரென
அரும்பும் மீசை
வயதினை மதித்தது
பதின்னான் கென்று!

காவ லரணினில்
கண்ணினை விழிப்பதால்
நெருப்பாய்ச் சிவந்த
அவனது விழிகள்
இருளில் கூட
எதிரியைத் துளாவுது

கழுத்தினில் தவழும்
நச்சு மாலையும்
கரங்களில் மின்னும்
சுடுகலன் சகிதம்
சிலையென நிற்கும்
அவனது தோற்றமும்,
வணக்கத்திற் குரியதாய்
கரங்களைக் கூப்புது!

பொ. ஐங்கரநேசன்

சிறுகதை

## புதிய நியதி

ஒரு கொடிய சூறாவளிக்கு மரங்கள் விழும். கட்டடங்கள் சிதறும். உலக ஜீவராசிகளின் கண்கள் அச்சத்தில் அலறும். நியதி. பூமியின் நியதி! தாங்கலாம். தாங்கிக் கொண்டே வாழலாம். வாழ்ந்து தானே வருகின்றது உலகம்!

அகிலம் இனியது! நேசம் இனியது! வாழ்க்கை இனியது ஆனால் -திடீர்ச் சூறாவளியால் துவண்டு போகும் மனசு, வேதனைக்குரியது! விம்மலுக்குரியது!

பூக்கள் விழுவதைப் பொறுக்கலாம்; இலைகள் விழுவதை இரசிக்கலாம். மனசு விழுவதை?

நானும் ஒன்றரை வருஷ காலமாகத் தேடிக்கொண்டு தானிருக்கின்றேன். தேடுவது என்பணி! ஒரு மேகம் ஓடிவிட்டால், இருக்கவே இருக்கிறது அடுத்த மேகம் அதுவும் ஓடிவிட்டால், அடுத்த மேகம். சோகமே தேவையில்லை.

ஆனால் - மனசு ஓடிவிட்டால், உடைந்து சிதறி விட்டால் அழுகை ஒன்றே அரவணைக்கும்!

நேற்று வந்திருந்த நண்பனிடம் கேட்டேன் ''என் மகளைக் கண்டாயா?'' என்று.

''கண்டேன். தந்தையுடன் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தாள். சித்தப்பாவிடம் என்ன சொல்லி விடுகிறது என்று கேட்டேன். சுகமாக இருப்பதாகச் சொல்லும்படி சொன்னாள்''

அவள் தந்தை என் அண்ணன் நான் அவள் சித்தப்பா!

எனக்கு ஆச்சரியமும் சந்தோசமும்! அட! அவள் இப்படிப் பேசுவாளா? இந்த ஒன்றரை வருஷப்பிரிவு, என் ஞாபகத்தை அவளிடமிருந்து நீக்கவில்லையா? எனக்குக் கூடவே வேதனையும்.

அடிக்கடி நகரப்பகுதி சென்று அண்ணனின் வீட்டிற்குப் போய்வரும் என் அம்மா சொல்வாள், ',பிரச்சினை முடிந்தபிறகு சித்தப்பாவைப் பார்க்க வருவதாக அவள் சொன்னாள்' என்று''.

எனக்கு எரிச்சல் வரும். மனசு அழத்தொடங்கும்! கண்களில் கரைகளில் கண்ணீர் அலையடிக்கும்; பிரச்சினை தீர்ந்துவிட்டால், தேசம் வெளிச்சம் பெற்றுவிட்டால், எதிரி விரட்டியடிக்கப்பட்டால், சுதந்திர ஈழம் பெற்ற துள்ளலோடு நான் அவளைச் சென்று பார்ப்பேன். அவள் மழலை மொழியில் நனைவேனே... தூக்குவேன். தோளில் வைப்பேன். முத்தமிடுவேன். ஒரு முத்தமா? ஆயிரம்... இலட்சம்...

இவைமட்டுமா? நான் கல்வி கற்ற பாடசாலை, நான் ஆசிரியரைக்கண்டு ஒளித்துக் கொண்ட கட்டடம், யாரோ ஒருத்தி என் மனசுமீது பூவை வீசிவிட்டுப்போன புனித இடம். என் நண்பன் ஒருவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சோக இடம் அத்தனை பகுதிகளையும் அவளுக்கு அடையாளம் காட்டுவேனே...

சே! தாங்கமுடியாது. அவள் நினைவுகளைச் சுமக்க முடியாது. சுமப்பதாகவிருந்தால், ஆயிரம் இருதயங்கள் எனக்கு வேண்டும் அட! ஓர் இதயத்தையே உருப்படியாக வைத்திருக்க முடியாமல் உள்ளதே!

தொண்ணூறில் - யுத்தம் தொடங்கிய காலத்தில் - என்வீட்டில் தான் அவள் இருந்தாள். ஒருவயது பூர்த்தியான நிலையில் வீட்டு முற்றத்தில் ஓடித்திரிவாள்.

'சரண்யா' என நான் அழைக்கும் போதெல்லாம் என் மடியில் சரணடைந்து விடுவாள். எக்கச்சக்கமாய் அலட்டுவாள். ஏகப்பட்ட கேள்விகள் கேட்பாள். பல கேள்விகளுக்கு எனக்குப் பதில் சொல்லத் தெரியாமல் இருக்கும். பெரிய அவஸ்தை. குழந்தைக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். தெளிவாகச் சொல்ல வேண்டும். நாளை இந்த தேசத்தின் நாயகி அல்லவா அவள். பொய்யைக்கூறி அவள் மூளையில் புழுதியைப் படிய விடுவதா?

அண்ணன் சொல்வான் 'நீதான் அவளுக்கு அலட்டப் பழக்கியிருக்கிறாய் ... படுக்கையில் கூட கேள்வி கேட்கிறாள்? என்று, நான் மௌனமாகச் சிரிப்பேன்.

-- வவுனியா திலீபன் --

அவளை கடைத்தெருவிற்குக் கூட்டிச் செல்வேன். கண்ணில்படும் மரங்களை, பறவைகளை மனிதர்களை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைப்பேன். ஏகப்பட்ட கே ... ள் ... வி ... க ... ள், மௌனம் சாதித்தால், தலை முடியைப் பிய்த்தெறிவாள். கழுதைக் கடிப்பாள் அதனால் பதில் தெரிந்த கேள்வியை நானே கேட்டு, பதிலையும் நானே சொல்லி அவளைச் சமாளித்து விடுவேன்.

ஒரு நாள் தலைக்குமேல் குண்டு வீச்சு விமானங்கள் பறந்து செல்லும் ஓசை கேட்டது. நாங்கள் முற்றத்தில் நின்று அச்சத்துடனும் ஆர்வத்துடனும் விமானங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றோம. அவள் 'அங்கே' என்ற இடத்தை ஆவலுடன் அனைவரும் பார்க்கிறோம். வானத்தில் மிகத்தாழ்வாக இரு பறவைகள் பறந்து கொண்டிருந்தன. எனக்குச் சிரிப்பு வந்தது. அவள் சொன்னாள், 'பங்கருக்குள்ள போவம்' என்று.

இப்படியே சில மாதங்கள் தானிருந்தாள் மீண்டும் நகரப்பகுதிக்கு அண்ணன் அழைத்துச் சென்றுவிட்டான். அண்ணனுக்கு வேலை பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம்.

இன்னமும் அவளைக்காணவில்லை.

நானும் தொடர்ந்து கடிதம் வரைந்து கொண்டு தானிருககிறேன்.

'ஒரு தடவை அவளை அழைத்து வரமாட்டாயா?' என்று.

அன்று பதில் கிடைத்தது நாளை அழைத்து வருகிறானாம். இரவு தூக்கமில்லை. வண்ண வண்ணக் கனவுகள். விடிந்தது. சந்தோஷமாக விடிந்தது.

நன்கு வளர்ந்திருப்பாள். தெளிவாக அலட்டப் பழகியிருப்பாள். 'சித்தப்பா' என்று கூவியழைப்பாள் எத்தனை எதிர்பார்ப்புகள்.

பயணிகள் வரும் நேரம் துப்பாக்கிகள் வேட்டோசை. ஷெல் மழை. நெஞ்சு துடிக்கிறது கண்களில் கண்ணீர் ரத்தம்.

இராணுவத்தின் அட்டகாசத்தால் பயணிகள் பீதியில் ஓடிவருகிறார்கள். கடவுள் இந்த நேரத்தில்தான் உச்சரிக்கப்படுகிறார்.

அச்சத்திலும் அவசரத்திலும் ஓடிவந்த ஒருவன் சொல்லுகிறான்: 'அண்ணன்' மகளுடன் நாளை வாறதெண்டு சொல்லச் சொன்னான்!

தப்பிவிட்டேன் தப்பியே விட்டேன். பெரும் பழியிலிருந்து விடுபட்டு விட்டேன்.

'நீ ... சரண்யாவைக் கூட்டி வராதே நான் அங்கு வந்து அவளைப்பார்ப்பேன். வெகு விரைவில் நீ இருக்கும் அந்த இடமும் என் தேசம் தான். நான் ஓடித்திரிந்து உடும்பிற்கு கல்லெறிந்த இடம். அங்குள்ள மரங்களுக்குக்கூட என் சத்தம் பரிச்சயம் அங்குள்ள பாதைகளுக்கு என் பாதங்களுடன் ரத்த சம்பந்தம் உண்டு அது என் தேசம் என் இனத்தின் தேசம் அந்நியன் அட்டகாசம் செய்ய முடியுமா போர்க் கருவிகளுடன்தான் என் சரண்யாவை நான் முத்தமிடுவேன்.

அண்ணனிற்கு நான் வரைந்த அழகான கடிதம் நாளை அவனைச் சென்றடையும். என் மனசுள் தெளிவு; ராட்சச உறுதி.

## புளகாங்கிதம் — இனியவன்

### சான் மெரினோ!

உலக அரங்கில் உனது பெயர் உரத்து உச்சரிக்கப்படத் தொடங்கி ஒரு சில நாட்கள் தான்.
உனது பெயர் உச்சரிக்கப்படும் போது கூடவே ஓர் உறுதியும் எமது நெஞ்சில் கிளர்ந்து எழுவதால், எமது நெஞ்சுக்கு நெருக்கமாகிறது.
அதனால்
இந்து மாகடலின் நடுவே ஒரு புயலின் மையத்திலிருந்து உனக்கு வாழ்த்து மடல் வரைகின்றோம். அதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் கூட...

### ஓ! சான் மெரினோ!!

பூமிப் பந்தில் பன்னெடுங்காலம் வாழ்ந்திருந்த போதும் உனக்கு உலகரங்கம் இப்போது தான் இடம் ஒதுக்கியிருக்கிறது. நாடு என்று இப்போது தான் ஐக்கிய நாடுகள் அவை உன்னை ஏற்றுக் கொண்டிருக்கின்றது.
நீண்ட காலத்தின் பின் உனக்குக் கிடைத்திருக்கும் கௌரவமும், பெருமையும் எமக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.
'வீட்டோ' எனப்படும் ரத்து அதிகாரத்தையும், அணு குண்டு ஆற்றலையும் தம்வசம் வைத்திருக்கும் வல்லரசுகளுடன் கை குலுக்கி உனது இறைமையை நிலைநாட்ட .. உனக்கு ஒரு இடம் நிச்சயமாக்கப்பட்டு விட்டது. அந்தப் பூரிப்பு உன்னை எவ்வளவு மகிழ்வடையச் செய்யும் என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.
எம்மையும் ஒரு நாள் ஐ. நா. பெருமன்றத்தின் வாசலில் வரவேற்க நீயும் காத்திருப்பாய் என்று தான் நம்புகின்றோம்.

### சான் மெரினோ!

உலக மன்றமாம் ஐக்கிய நாடுகள் சபையில் அண்மையில் சேர்க்கப்பட்ட மிகச் சிறிய தேசத்தின் பெயர்.
மத்திய தரைக் கடலிற்கு மேலாக நாற்புறமும் இத்தாலியின் தரைப்பரப்பினால் சூழப்பட்ட சின்னஞ்சிறிய நாடு இருபத்து மூன்றாயிரம் பேரை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட இந்த நாட்டின் பரப்பளவு 23.6 சதுர கிலோ மீட்டர்கள் தான்.
கடற்பரப்பு அல்லது கடல் எல்லை எதையும் கொண்டிராத இந்தத் தேசம் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளப்பட்டு மிகச் சில நாட்கள் ஆகிறது .. பண்டைய காலத்து தேசங்களில் ஒன்றாக விளங்கிய சான் மெரினோ நவீனத்துவங்களாலும், காலனி ஆட்சிகளாலும் அலக்கழிக்கப்பட்டு இப்போது தான் ஒரு தேசமாக மீண்டும் தலை நிமிர்ந்துள்ளது.

### சான் மெரினோ!

இனிமேல் எமது நம்பிக்கைகளுக்கு நீ உரமூட்டுவாய். ஆம்.

உப்பும் இல்லை. மின்சாரமும் இல்லை. இங்கென்ன தனிநாடு வேண்டும்? என்று கேட்போர் இன்னமும் எம்மிடையே இருப்பதால் உனது திசை அடிக்கடி சுட்டிக் காட்டப்படும்.

இருபத்தையாயிரம் சதுரமைல் கொண்ட இந்த அழகிய சின்னஞ்சிறுதீவில் இரண்டு அரசுகளா? வேண்டாம் என்று கூறுவோருக்கு உனது பெயர் விளக்கம் கூறும்.

புவியியல் ரீதியான எல்லைகளைக் காட்டி ஐக்கியமென்றும், ஒருமைப்பாடு என்றும் கூக்குரலிடுவோருக்கு நீ பெற்றுள்ள அந்தஸ்து கவனையளிக்கக் கூடும்.

இந்தச் சின்னஞ்சிறிய நாடு வாழமுடியுமா என்று கேள்வியெழுப்பியவர்கள் உனது நிலை கண்டு மூக்கின் நுனிக்கு விரலை உயர்த்தி ஆச்சரியப்படக் கூடும்.

உலகப் படத்தில் பெயர் எழுதுவதற்கு கூட பரப்பெல்லை காணாதே என்று புலம்பியவர்கள் இனி வெட்கித் தலை குனியக்கூடும்.

ஒரு தேசத்தின் விடுதலை என்பது எல்லைகளாலோ, அது கொண்டிருக்கும் வளத்தினாலோ நிர்ணயிக்கப்படுவதல்ல. வாழும் மக்களின் மனவுறுதியில் தான் விடுதலை விருட்சம் வேர் விட்டு வளர்கிறது என்ற செய்தியை உனது பிறப்பு உலகுக்கு எடுத்து இயம்பட்டும்,

ஆதலால்

### சான் மெரினோவே!

இந்து மாகடலில் ஒரு புயலின் மையத்திலிருந்து வரும் இந்த வாழ்த்தையும் ஏற்றுக் கொள்.

யாழ்ப்பாணம்

# செஞ் சோலை

யாழ்ப்பாணம் புறநகரிலிருந்துசுமார் ஒன்பது கி.மீ தொலைவிலுள்ள ஒருகிராமத்தில்மிகச்சிறந்தமுன்னுதாரணமாக வளர்ந்து வரும் கல்வி நிறுவனம் செஞ்சோலை;மகளிர் பாடசாலை. செஞ்சோலை மகளிர் பாடசாலை என்ற பெயரில் என்ன இருக்கிறது என்று கேட்டுவிட முடியாது.வாழ்க்கையையும் கலவியையும் உண்மையிலேயே ஒரு வித்தியாசமான கோணததிலிருந்து செஞ்சோலைமகளிர் பாடசாலை அணுகுகிறது.

புதிய தேவை, புதிய பொருளாதாரச் சம்பிரதாயம், உற்பத்தி உள நிலைகளின் மாற்றம் ஆகியவற்றிற்கு ஏற்ப இங்கிலாந்தில் 19-ஆம் நூற்றண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாகிய றெட்பிறிக் (Redbrick) பல்கலைக் கழகக் கோட்பாட்டை செஞ்சோலை ஞாபகமூட்டுகிறது Redbrick கின் நோக்கம் கல்வியில் கவனத்தை நாட்டின் தேவைகள் பக்கம் திரும்புவது தான். செஞ்சோலையின் நோக்கமும் சிறுவர்களை மையமாகக் கொண்ட வாழ்க்கைக் கல்வி (வாழக் கற்றல்) என்று அதன் ஸ்தாபகர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

இந்த நிறுவனத்தின் முதுகெலும்பு ஜனனி .நிறுவன அமைப்புரீதியாக ஜனனியின் மேற்பார்வையில் அவருக்கு அடுத்தபடிய கதனுஜா ஒழுங்கமைப்பைக் கவனிக்கிறார். விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் செயற்திட்டம் செஞ்சோலை மகளிர் பாடசாலை செஞ்சோலை வளாகத்தில் அதன ஓர் அங்கமாக சிறுவர் இல்லமும் அமைந்துள்ளது.

## செஞ்சோலையின் தோற்றமும் நிலைப்பும்

ஜூலை 91 இல் தொடங்கிய செஞ்சோலை மகளிர் பாடசாலை அக்டோபர் 22 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படடது. பாடசாலையின் அதிபர் கிரிஜா.

நகரங்களின் இரைச்சல் செவிகளைப் பாதிக்காத அமைதியான சுற்றுச் சூழலில் செஞ்சோலை அமைந்துள்ளது. செழித்து வளர்ந்த மரங்களால் இனிமையாக்கப்கப்பட்ட காற்றை அனுபவிப்பதற்கான ஒரு தனியான, புனிதமான இடமாக அதனை அமைத்துக் கொண்டுள்ளார்கள்,வளாகத்தில் ஆங்காங்கே சிறுவர் விடுதிகள், பாடசாலைக் கட்டடங்கள் இத்தியாதி நிறுவப்பட்டிருந்த போதிலும் ஒரு சோலையின் அந்தரங்கம் போகாமல் அது செழுமை பெற்று; விளங்குகிறது முன்பு அங்கிருந்த முட்புதர்க் காடுகள் எங்கே? மறைந்துவிட்டது உயர்ந்து வளர்ந்த மாமரங்களைத் தொட்டபடி விரையும் காற்றின் சுகந்தத்தைச் சிறார்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

தற்போது நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் தாய் தந்தையரின்பராமரிப்பை இழந்தவர்கள்- மூன்று வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் உட்பட்ட பெண் பிள்ளைகளுக்கு இங்கு கல்வி வழங்கப்படுகிறது.இவர்களது.உடல் ஆரோக்கியத்திற்கும் கல்வி நலனுக்குமாகச் சேர்த்து சிறுவர் இல்லத்தில் இருப்பிட வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.


சிறுவர்களுக்கான உச்ச வயதெல்லையைப் 15 வயதுஎன்று சர்வதேச தொழில் ஸ்தாபனமும், ஐக்கிய நாடுகள் சனத்தொகைப் பிரிவும் வரையறை செய்துள்ளன. தற்போதைய யுத்தங்களினால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் விருத்தெரிந்த சிறுவர்களும்தான் என்று சமூகவியலளர் கருதுகின்றனர் ஒரு மனிதனின் வாழ்வு எப்படி அமையப்போகிறது என்பதை அவர்களது குழந்தைப் பருவ நிகழ்வுகள் பாதிக்கின்றன. அவ்வாறே ஆரம்ப காலப் போக்குகளின தாக்கமும்பாதிக்கிறது வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தினால் பாதிககப்பட்ட குழந்தைகள் வாழ்வில் பாதுகாப்பையும், அன்பையும் விரும்புகிறவர்கள். அவர்களுக்கு உதவும் வகையில் செஞ்சோலை மகளிர் பாடசாலையையும்.சிறுவர் இல்லமும் ஒரு முன்னோடி முயற்சியாகஆரம்பிக்கப்பட்டிருப்பது நம்பிக்கைக்குஇன்னும்இடம் இருப்பதைக்காட்டுகிறது சிறியஆரம்பம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட முடியும் என்பதற்கு செஞ்சோலை ஓர் உதாரணம் என்றால் அது மிகையாகாது

வடக்கிலும் கிழக்கிலும் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மனித நேய அடிப்படையில் உணவு மற்றும் மருந்து போன்ற உதவிகள்கிடைக்காமலில்லை. சிலர் பெயருக்காகச்செய்கிறார்கள். அல்லது பெயரளவில் செய்கிறார்கள். எது எப்படியாயினும், கல்வியைக் கருணை உதவியாக வெளிநாடுகளிலிருந்து எவரும் எமக்கு வழங்குவதில்லை. ஒரு போர்க்கால சூழலில் எமக்கு வேண்டிய கல்வியை நாமே அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு செஞ்சோலை ஓர் முன்னுதாரணமான மையமாக எடுத்துக் கொள்ளலாம், கல்விக் கூடங்களைப்புதிய சமுதாயத் தேவைகளுக்கு பயன்படுத்துவதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. இது பலரைப் பொறுத்த வரை ஒரு கல்வியியல் கோட்பாடாக இருக்கலாம். ஆனால் செஞ்சோலையை நிர்வகிப்பவர்களைப் பொறுத்த வரைஇது ஓர் அனுபவம்.

## புதிய நோக்கங்கள்

67 பிள்ளைகளுடனும் பத்து ஆசிரியர்களுடனும் செஞ்சோலை மகளிர் பாடசாலை செயற்படுகிறது.

பெண்கள் விடுதலையடைந்த நிலையில் நாட்டுக்கும் பயன்பொருத்தமாக உதவுதல். மற்றும் நாட்டுப் பற்று மிக்க, நாட்டைக் காப்பாறறக் கூடிய பிரச்சினைகளை சமூகத்துக்கு அளித்தல் செஞ்சோலையின் தலையாய நோக்கமாகும். கல்வி பல முற்போக்கான கோட்பாடுகளைக் கண்டிருந்த போதிலும் அது எந்த அளவில் பள்ளிக் கூடங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு கேள்வியாகவே உள்ளது. ஆனால் செஞ்சோலையைப்



## முன்னுதாரண கல்வி நிறுவனம்

பொறுத்தவரை கல்வியியலாளர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்புகள், முன்னோடிகளின் அனுபவங்கள் ஆகியவற்றின் சாரம் நன்கு இறங்கியிருக்கிறது. கல்வித் தத்துவ ஞானிகளின்தரிசனங்களுக்கும் செஞ்சோலையின் பாடத்திட்டத்திற்குமிடையே பெரும் இடைவெளிகள் பற்றிய விமர்சனத்துக்கு இடமில்லாமல் பாடத்திட்டம் அமைந்திருக்கிறது.

கல்வியின் நோக்கம் பரீட்சைக்கு மாணவரைத் தயாரிப்பதல்ல. வாழ்க்கைக்குத் தேவையான பூரண ஆளுமை உள்ளவர்களை உருவாக்குவதுதான் எமது நோக்கம் என்கிறார் செஞ்சோலை அமைப்பின் பொறுப்பாளர் ஜனனி.

பாடசாலையில் செயல் முறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பிள்ளைகளின் தனியாற்றல் இனங்காணப்பட்டு அதற்கேற்ற முறையில் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. சங்கீதம் நடனம் போன்ற அழகியல் கலைகளுக்கும் பாடத் திட்டத்தில் முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டுப்பாடு (School Discipline) செஞ்சோலையில் வலியுறுத்தப் படுவதில்லை என்கிறார் அதன் அதிபர் கிரிஜா. மாறாகப் பாடசாலை ஒழுங்கு (School Order) கடைப் பிடிக்கப் படுகிறது.

இங்கு பிள்ளைகள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் எல்லோரும் ஒரே குடும்பம் போல் ஒத்திசைவாகச் செயற்படுகிறார்கள். செஞ்சோலை இருணைந்த பெரிய குடும்பம்.

வெளியிலிருந்து பல்வேறு சூழலிலிருந்து வந்தவர்கள் இங்கு கல்வி பயில்கிறார்கள். ஒரு சோலைப்போல் குழந்தைகளைச் சமூகத்திலிருந்து பிரித்தெடுத்து இவர்களுக்குக் கல்வி வழங்கப்படுவதில்லை. சம வயதுக் குழுவினருடன் இயற்கையான சூழலில் இவர்கள் வாழ்கிறார்கள். சமூகத் திட்டங்கள், மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் இவர்கள் வெளியில் பங்குபற்ற வாய்ப்புகள் இருப்பதால் சமூகப் பொருத்தப்பாடும் இலபாகவே ஏற்படுகிறது.

பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு ஆறுமட்டும் வகுப்புகள் இயங்குகின்றன. பிள்ளைகளின் உடல் வயதிற்கும். உள வயதுக்கும் ஏற்றாற் போல் வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஒன்றிணைந்த பாடத்திட்டம் வகுப்பறைக் கற்பித்தலில் பின்பற்றப்படுகிறது. இங்கு ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஜப்பான் பொருளாதார பலம் பெற்று விளங்குவதற்கு முன்னால் ஆரம்பக் கல்விக்குத்தான் பெரும் செலவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது

வழிகாட்டல் அடிப்படையில் சுயமாகத் தமக்குரிய முடிவை

**மதன்**

எடுத்துக் கொள்ள பிள்ளைகள் பயிற்றப்படுகிறார்கள். ஆசிரியர்களும் கருத்தரங்கு சேவைக் காலப்பயிற்சி ஆகியவற்றில் கலந்து கொண்டு தமது திறனை விருத்தி செய்து கொள்கிறார்கள்.

## சிறார் இல்லம்

சிறுவர் இல்லத்தில் பிள்ளைகளும் நிர்வாகிகளும் அன்னியோன்யமாக வாழ்கிறார்கள். பத்துமாதம் ஒரு சுமையச் சுமந்த அன்னையைப் பிரிந்த பிள்ளைகளும், பாதுகாப்பு வழங்கிய தந்தையைத் தவறியவர்களும் சிறுவர் இல்லத்தில் வாழ்கிறார்கள் பாதுகாப்புக்கான ஏக்கம் பிள்ளைகளிடம் இருப்பதாக நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள் இதை நிவர்த்தி செய்யும் வகையில் துறைசார்ந்த நிபுணர்களின் உளவளத் துறையை நாடியுள்ளார்கள். சிறுவர் இல்ல நிர்வாகிகள் பிள்ளைகளுடன் அன்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள். உற்றார் உறவினர் எல்லாம் அவர்கள் தான்.

வைத்திய பரிசோதனை வழங்கப்படுகிறது. சிறுவர்களின் பொழுது போக்கிற்கென சிறுவர் பூங்கா, உள்ளக விளையாட்டு அரங்கு ஆகியன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கற்பித்தல் உபகரணங்கள் உட்பட பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருள்களும் இங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

சுயதேவைப் பூர்த்தியின் ஒரு முயற்சியாக உயிரியல் வாயு உற்பத்தி செய்யப்படுகிறது. கோழிப் பண்ணை, மாட்டுப்பண்ணை, மரக்கறித் தோட்டம் ஆகியனவும் செஞ்சோலையில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் விசேடமென்ன வென்றால், பாடத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சந்தனக் காடு

ஆக்கிரமிப்பிற்குஎதிராக தீவிரம் பெற்றுவிட்ட இன்றைய போராட்ட கால கட்டத்தில், பல இன்னல்களை சுமந்து, பலரும் போராட்டத்தில் இணைந்து நிற்கையில், எம்மில் ஒரு சாரார் ஒதுங்கியேநிற்கிறார்கள்.ஒருசாரார் சுதந்திரமான வாழ்வைத் தேடி அந்நிய தேசத்திற்கு ஓடுகின்றார்கள். பொருள்கள் மீதும், வாழ்கை மீதும் கொண்டுள்ள ஆசைகள் அவர்களை நாடோடிகளாக அலையவைக்கின்றன.

தேசிய உணர்வுள்ள கலைஞன் ஒருவன் அவற்றைப் பார்த்து ஆவேசங்கொள்வது நியாயமானதே. அவர்களெல்லாம் சொந்த மண்ணில் தரித்து நிற்க வேண்டும். போராட்டத்தில் இணைய வேண்டும். அவர்களது மனங்களிலே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் படைப்பிற்கூடாக அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். அவர்களிடம் எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தலாம், என்ற எண்ணத்துடன் படைப்பாளி இந்தப் படைப்பைப் படைத்துள்ளார்.

இன்று முனைப்புப் பெற்றுவிட்ட தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ளல் என்பது சமூகக் கடமை என உணர மறுத்து, ஒதுங்குபவர்கள், விலகி ஓடுபவர்கள், இந்த சமுதாயததில் ஊனமுற்றவர்களாக படைப்பாளியின் கண்களுக்குப் புலப்படுகிறார்கள். படைப்பாளி கொண்டுள்ள இந்த அர்த்தத்தின், குறியீடுகளாகவே; இந்த நாடகத்தில் வருகின்ற குருடன், செவிடன், முடவன் ஆகிய மூன்று பாத்திரங்களும் அமைகின்றன.

படைப்பாளர் இன்றைய குடாநாட்டு யதார்த்த சூழலை இந்தப்படைப்பில் ஒரு கற்பனைச் சூழலுக்கு இட்டுச் சென்று. பார்வையாளரிடம் ஒரு சுவாரசியத்தைஏற்படுத்த முனைந்துள்ளார். ஆனால் இதில் கையாளப்படும் கற்பனையின் நீட்சி இன்றைய யதார்த்தத்திற்கும் முரணானதாகவேயுள்ளது.

குருடன்,செவிடன்,முடவன் ஆகிய மூவரும் சுகவாழ்விற்கான இடந்தேடி பயணப்படுகிறார்கள். எடுத்துச் சென்ற பணம், பெறுமதி மிக்க தங்க நகைகள் எல்லாவற்றையும் இழந்து துன்பப்படுகிறார்கள். மீண்டும் சொந்த இடத்திற்கே திரும்புகின்றார்கள். இந்த மண் தான் உங்களது சுதந்திர பூமி, சுகந்தம் நிறைந்த சநதனக்காடு என உணர்த்தப்படுகிறது.நாட்டை விட்டு ஓடுபவர்களெல்லாம் இன்று அடி உதைபட்டு பொருள்களை இழந்து திரும்புகிறார்களா? என்ற கேள்வி இங்கு எழவே செய்யும். கொழும்புக்கு ஓடியவர்களுக்கு கொழும்பு தான் சுகந்தம் நிறைந்த சந்தனக்காடாக, சுதந்திர பூமியாக தெரிகிறது. இங்கே இன்றைய யதார்த்தம் காலத்திற்குக் காலம் வன்முறைகளால் சொந்த மண்ணிற்குத் திரும்புவதை இன்றைய நிலையில் கருத்திற் கொள்ளமுடியாது. இனவெறி வன்முறைகளைக் கூறி பயமுறுத்துவது போன்ற ஒருபார்வையே இங்கு ஏற்படுகிறது.

பல தசாப்தங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் வன்முறைகள் இன்று தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் மிகவும் சாதாரணமாகிவிட்ட ஒன்று. காலம் காலமாகவே சொந்த மண்ணை விட்டுஎமது மக்களில் பலர் பணத்தையும் பொருளையும் தேடிக்கொண்டவே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சிங்கள இராணுவத்திடமும், இன வெறியர்களிடத்திலும் இதே அங்கலாய்ப்புத் தான் தலை தூக்கி நிற்கிறது பொருள்கள் மீதும்,பெண்கள் மீதும் ஆசை. அவர்களிடம் உண்மைகளைப் பிரித்துப் பார்க்கும் அறிவு அறவே இல்லை. நிஜததையும் அதைக் குறிக்கும் குறிகளையும் பிரித்துப் பார்க்கத் தெரியவில்லை

சந்தனக்காடு நாடகம் நாற்பத்தியோராவது தடவையாக அரங்கம் நிறைந்த காட்சிகளாக மேடையேற்றப்பட்டுக் கொண்டு வருகிறது யாழ். குடாவில் மட்டுமன்றி வன்னி மாவட்டத்திலும் இந்த நாடகம் பல முறை மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையிடம்

இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களது பெயர் விபரங்கள் வருமாறு;

தவராஜா சிவகுமார், வல்வெட்டித்துறை, கனகசபை இராஜேந்திரன் தொண்டமனாறு, அருளானந்தன் அற்புதராஜ் பருத்தித்துறை, செல்லையா துரைரட்ணம், நாகர் கோவில் கிழக்கு, தங்கராஜா சண்முகராஜா வல்வெட்டித்துறை, வேலுகம் சந்திரலிங்கம் சந்திரன் தாளையடி, வடிவேலு சின்னத்துரை முள்ளியான், யாகப்பர் அன்ரன் சாள்ஸ் பருத்தித்துறை, சித்திரவேல் அமிர்தலிங்கம் மட்டக்களப்பு, வினாசித்தம்பி குலசிங்கம் பருத்தித்துறை, கதிரிநாதன் செல்வம் குருநகர், கந்தசாமி பத்மநாதன் வல்வெட்டித்துறை, சூசைப்பிள்ளை ஜேசுதாசன் பருத்தித்துறை, இராசையா சீதரன் திலீபன் அல்வாய், வள்ளிமயில் குணபாலசிங்கம் நாகர்கோவில் வடக்கு, அந்தோனிப்பிள்ளை மனோகரன், இளவாலை, பாக்கியநாதன் ஞானசீலன் பொலிகண்டி, தெட்சணாமூர்த்தி, திருஞானமூர்த்தி தாளையடி, குழந்தைவேல் ஆறுமுகம் வேதக் கோவிலடி சக்கோட்டை, அலெக்ஸ் றூபாட் வில்சன் செம்பியன் பற்று. செல்லத்தம்பி சேகர் விடத்தல்தீவு மன்னார், சுப்பிரமணியம் சற்குணராஜா வியாபாரிமூலை மன்னார். திருவெங்கடாசலம் அட்டலணம் மாதகல், நடராசா உத்தமசீலன், தொண்டமனாறு, கணபதிப்பிள்ளை ரவீந்திரன் பொலிகண்டி, சீனிப்பிள்ளை சந்திரலிங்கம் தாளையடி, இராசதுரை ஜெயராஜா தாளையடி, சங்கரப்பிள்ளை இந்திரலிங்கம் பருத்தித்துறை, குழந்தைவேல் குணசேகரம் திருவில் வல்வெட்டித்துறை, ஜேசுதாசன் அருள்தாஸ் அல்வாய், முருகேசு கமாரராஜ் சக்கோட்டை பருத்தித்துறை, இராஜரட்ணம் ஜீலியற் பிராங்கிலின் சக்கோட்டை பருத்தித்துறை, பிலிப்பையா டேவிட் ஜீவதாஸ் சக்கோட்டை, கஸ்பார் அந்தோனிப்பிள்ளை கரவெட்டி, கனாப்பிள்ளைசுப்பிரமணியம் முள்ளியான், நாகலிங்கம் சந்திரசேகரம் முல்லைத்தீவு, யாக்கோப் ஜீவா தலைமன்னார், இன்னாசிசூசை குருநகர், அந்தோனிப்பிள்ளை பாக்கியராசா கொழும்புத்துறை, கந்தசாமி ராஜீ மல்லாகம்,

(நாளை தொடரும்)

## செஞ்சோலை

தோடு இணைந்த செயற்திட்டமாகவே (Co- curricular Activity) இது காலப் போக்கில் நடைமுறைப் படுத்தப்படும் என்கிறார்கள்.

ஒரு உண்மைமிக்க நீதிமிக்க கல்வி அமைப்பு பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்கு செஞ்சோலை மகளிர் பாடசாலை ஓர் கொடையாக அமைந்துள்ளது.

# உலகம் முழுவதும் ஒரே கிராமமாகும் சாத்தியம்

'பூமி ஒரே கிராமம்' என்ற பதம் தொலைத் தொடர்பு வளர்ந்துள்ள இந்த நூற்றாண்டின் இறுதியில் உண்மையாகும் நிலை படிப்படியாக உருவாகி வருகிறது. இங்கு அந்தப் பதம் பயன்படுத்தப்படுவதன் கருத்து என்னவென்றால் ஒரு கிராமத்தில் நடக்கும் விவகாரங்கள் எவ்வாறு அங்குள்ள மக்கள் அனைவருக்கும் சில நிமிட நேரங்களில் தெரிய வருகிறதோ அவ்வாறே பூமியின் மூலை முடுக்கு எங்கும் நடைபெறும் விடயங்கள் சில நிமிடநேரங்களில் அனைவருக்கும் தெரியவரும்என்பதாகும்.

இன்றைய தொலைத் தொடர்புச் சாதனங்களில் வளர்ச்சி மிகவும் துரிதமான ஒன்றாகவே காணப்படுகிறது. இங்கு விண்வெளித் தொழில் நுட்பமும் தொலைத் தொடர்புத் தொழில்நுட்பமும் ஒருங்கிணைந்து உலகை ஒன்றிணைக்கும் கருமத்தில் ஒரு சாதனையைப் புரிந்துள்ளன எனலாம். மனிதனின் தொடர்புத் தேவைகளையும் உகைளாவிய ரீதியில் மக்களை இணைக்கும் தொலைக்காட்சி சேவைகளையும் இவை திறம்பட கையாண்டு வருகின்றன.

தொலைத் தொடர்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கை வகிப்பவை செய்மதிகள் (Satelites) ஆகும். அவை பல்வேறு வகையான தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட போதிலும் இன்று மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்திருப்பவை தொலைத் தொடர்பு செய்மதிகள் எனலாம்.

இதேவகை செய்மதிகளின் செய்திகள் பெருந்தொகையான தொலைத் தொடர்பு சுற்றுக்களினூடாக நுண் அலைகளாக (Micro waves) அனுப்பப்பட்டு வருகின்றன. இவற்றினூடாக ஆயிரக்கணக்கான தொலைபேசி இணைப்புக்களும் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களும் கையாளப்பட்டு வருகின்றன.

செய்மதிகளின் தோற்றத்திற்கு தூண்டுகோலாக அமைந்தவை ஏவுகணைகள் ஆகும். இரண்டாம் உலக யுத்தத்தில் பிரிட்டனைத் தாக்க ஜேர்மனியரால் பாவிக்கப்பட்ட வீ-2 ஏவுகணைகள் விண்வெளி தொழில் நுட்பத்தின் ஆரம்பப்படி எனலாம். பின்னர் விண்வெளி ஆய்வுக்கென இந்த ஏவுகணைகள் மூலம் விண்கலங்கள் அனுப்பப்பட்டுவந்தன.

1945 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் விஞ்ஞான புனைகதை எழுத்தாளராகிய ஆதர் சி. கிளார்க் என்பவர் பூமியில் நீண்ட தூரங்களிற்கு வானொலி அலைகளை அனுப்ப இந்த செய்மதிகளை பயன்படுத்தலாம் என்ற கொள்கையை முன்வைத்தார். இவர் பூமியின் சுழற்சி வேகத்தில் அதனைச் சுற்றிவரக் கூடியதாக ஒரு செய்மதி இயங்க வைக்கப்படுமானால் அது பூமியின் குறித்த இடத்துக்கு மேல் அந்தரத்தில் தொங்கும் ஒரு 'அன்ரனாவாக' தொழிற்பட முடியும் என்ற கருத்தை முன் வைத்தார்.

செய்மதிகள் வளித்தடை மிகவும் குறைந்த பிரதேசத்தில் புவியீர்ப்பு சக்தியின் கீழ் இயங்குவதால் அவற்றுக்கு எரிபொருள் தேவைப்படுவதில்லை. எனவே இந்தச் செய்மதிகளில் பொருத்தப்படும் தொலைத் தொடர்பு கருவிகளை சூரிய சக்தி மூலம் இயங்க வைக்க முடியுமென்றால் நீண்டகால பயனைப் பெற முடியும் எனவும் அவர் கூறினார். இந்தக் கருத்து தொலை

**வேலவன்**

த்தொடர்பு செய்மதிகளின் வளர்ச்சியில் மிகப் பெரிய பங்காற்றியது எனலாம்.

ஆரம்ப காலங்களில் செய்மதி தொலைத்தொடர்புகள் தரையில் ஒரு நிலையான இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஏற்படுத்தப்பட்டு வந்தன. இன்றைய வளர்ச்சியில் அலை அசையும் பொருளில்இருந்து இன்னொரு அசையும் பொருளுக்கு செய்திகளை அனுப்பக் கூடியவையாக வளர்ச்சி பெற்றுள்ளன.

அமெரிக்கபாதுகாப்பு அமைச்சு 1966இல் பூமியின் சுழற்சி வேகத்திலும் சற்று அதிக வேகத்தில் தனது தேவைக்கென முதலாவது தொலைத் தொடர்பு செய்மதியை அனுப்பி வைத்தது. இந்த செய்மதி ஒரே நேரத்தில் இரண்டு புள்ளிகளை அவதானித்து தகவல்களை அனுப்பக் கூடிய நிலையில் இருந்தது. பின்னர் படிப்படியாக இந்தச் செய்மதிகளின் எண்ணிக்கை 26 ஆக உயர்த்தப்பட்டது இவை குரல்களையும், படங்களையும் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு அனுப்பக் கூடிய கருவிகளைக் கொண்டிருந்தன. இவை இராணுவ தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுவந்தன.

அண்மையில் இந்தியாவின் இராணுவ தொலைத் தொடர்பு சாதனங்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. அதில் தெரிவிக்கப்பட்ட செய்திகளின்படி இந்தியாவும் தனது செய்மதிகளை இராணுவத் தொலைத் தொடர்புகளுக்கென பயன்படுத்தி வருவதாகத் தெரிய வருகிறது.

தமிழீழத்தில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது இந்தச் செய்மதி தொலைத்தொடர்பு சாதனங்கள் பெரும் உபயோகத்தில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளித் தொழில் நுட்பமும் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பமும் ஒருங்கிணைந்த இந்தத் தொலைத் தொடர்புச் செய்மதிகள் இன்று பூமியின் பல்வேறு இடங்களை இணைத்து நிற்பது மட்டுமல்லாமல் அவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பாகங்களைத் தயாரிக்கும் தொழில் துறையிலும் பல நாடுகளை ஈடுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக வளர்ச்சியடைந்த நாடுகளிடையே ஒரு போட்டி நிலைமை உருவாகியிருப்பதுடன் அவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் பெருமளவு மூலதனமும் இடப்பட்டுள்ளது. கெடுபிடி யுத்தத்தின் முடிவில்; இராணுவத் தேவைக்கென செய்யப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகள் பொதுமக்களின் தேவைக்கென திசைதிருப்பப் படாவிட்டால் பெருமளவு மூலதனமும் மனிதசக்தியும் வீணாகக் கூடிய நிலைமை இன்று உள்ளது.

இத்தகைய ஒரு நிலையில் 150க்கு மேற்பட்ட நாடுகள் இன்று விண்வெளி ஆராய்ச்சியுடனும் அதன் பயன்பாட்டுடனும் நெருங்கிய பிணைப்பைக் கொண்டுள்ளனர். எனவே இலாபகரமான ஒரு தொழிலாக இந்த தொலைத் தொடர்பு செய்மதிகளின் செயற்பாடுகள் மாறக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. அதாவது இந்த ஆராய்ச்சிகள் தொழில் மயப் படுத்தப்படும். அதனால் புவி ஒரே கிராமமாக மாறுவது சாத்தியமானதாகும்.

## விழுதுகள்

டான். கடைசி ரவை இருக்கும் வரை சண்டையிட்ட இவன் தன்னை நேசித்த மண்ணிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான். உயிரற்ற இவனது சடலத்தில் முகத்தைக் கீறிக் கிழித்து மகிழ்ந்தனர் இந்தியப் படையினர். குரூரத்தனத்தில் பிரியமான படையினருக்கு அமைதிப்படை என்று பெயரிட்டதற்காக வரலாறு சிரித்துக்கொண்டது.

சில வேளைகளில் இவனுக்கு வீட்டிலிருந்து செலவுக்குப் பணம் கிடைக்கும்பணம் வரும் கடிதஉறைக்குள் இவனது சகோதரர்களின் கடிதமும் வரும். கடிதஉறையைப் பிரித்து பணத்தை பெற்றுக் கொள்ளும் இவன் கடிதத்தை உடனே கிழித்து விடுவான். ஒருநாள் கூடக் கடிதத்தைப் படித்ததில்லை. ''உனக்கு படிக்கத் தெரியாட்டித்தாடா நாங்கள் படிக்கிறம் என்று கூறும் நண்பர்களிடம் 'இப்ப தேவை காசு தானே தவிரக் கடிதம் இல்லை'' என்பான். உண்மையான காரணத்தைக் கூறமாட்டான்.

ஒரு சராசரி யாழ்ப்பாணக் குடும்பத்தவரிடமிருந்து வரும் கடிதத்தில் எப்படியான வசனம் வரும் என்பது அவனுக்குத் தெரியும். அதை வாசிப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகளும் அவனுக்குத் தெரியும். ஏனெனில் 'மென்மையான மனதுடையவர்களே போராளிகளாகின்றார்கள்'' என்ற சீலனின் வசனம் எப்போதும் அவனது நினைவில் இருந்தது.

## சந்தனக்காடு

அநியாயமாக உயிர்களைக் கொன்றுகுவிக்கிறார்கள். மீண்டும் மீண்டும் நாங்களும் பயந்து பயந்தே பயணப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம்.

இந்த நாடகத்தில் வெறுமனே நாடகம்,மனிதச் செயல்களையும் செயல் நிகழ்வுகளையும் நிகழ்த்திக் காட்டுவது என்ற நிலையில் வெறும் பிண்டப் பிரமாணமாக செயல்பாடுகள் மட்டுமே பல கட்டங்களிலும்நிகழ்த்தப்படுகிறது. நாடகம் ஒரு கட்புலக்கலை என்பதையே கலைஞர்கள் உணர்த்தத்தவறிவிடுகிறார்கள். பார்ப்போருக்கு முன்னே நடிகர்கள் (கட்புல நிலையில்) நடிக்காத விடத்து நாடகம் நாடகமாகாது. நடிகர்கள் உடற் பாவவியல் எதுவுமின்றியே வெறும் மனித உருவங்களாகத் தோன்றுவதும்வெறுமனே மனனம் செய்த உரையாடல்களை ஒப்பிப்பதையும் இங்கே குறிப்பிடலாம்.

இந்த நாடகத்தில் வருகின்ற குருடன், செவிடன்,முடவன் ஆகிய மூன்று பாத்திரங்களினதும் இடைவிடாத உரையாடலும் கேலிப் பேச்சுகளும் பார்வையாளர்கள் தம்மை மறந்த நிலையில் ஈடுபாடு கொள்ளும் கலகலப்பு உணர்வை மட்டுமே ஏற்படுத்துகிறது. நாடகத்தின்மிக முக்கியமான உள்அர்த்தத்தைப்பற்றி சிந்திக்கவேபார்வையாளருக்கு இடம்தராத வகையில் அவர்கள் செயலற்ற நிலையில் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கச் செய்து விடுகிறது. இந்த நாடகத்தின் குறிக்கோள்களுக்கு முக்கியமான குறியீட்டு உத்தியே சிதைந்து விடுகிறது.

நாடகத்தின் மறுபாதி ஒரு குடும்பத்தின் வாழ்வியல் அங்கலாய்ப்பை விபரிக்கின்றது. ஏற்கனவே போராட்டத்தில் இணைந்து விட்ட மூத்த மகன், விதவைத்தாய், படிப்பை முடித்து வீட்டிலிருக்கும் மகன், இனவெறியர்களால் தனது குடும்பம் சிறைப்பிடிக்கப்பட்ட சோகத்தில் மனநோயாளியாகிவிடும் மாமன், இவர்களது அவதிகள், அங்கலாய்ப்புகளேநாடகத்தின் உயிரோட்டமாயமைகின்றது.

போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள காலம் கழியும் வரை காத்திருக்கும் மகன், அம்மா; உங்களுக்குப் பென்சன் வந்துவிட்டதுதானே நான் இனிப்போராட்டத்துக்குப் போகலாந்தானே? என்று கேட்பதும், மூத்த மகன் இறந்த செய்தியுடன் வரும் போராளியுடன், தாய் வீட்டிலிருக்கும் மகனை போராட்டத்திற்கு அனுப்பிவைப்பது, மாமனின் குடும்பத்திற்கு நேர்ந்த கதிக்காக எதிரிகளைப் பழிக்குப் பழிவாங்குவேன் என்று சமகமிட்டு மகன் போர் முனைக்குப் புறப்படுவது இவையெல்லாம் இன்றைய போராட்டத்தின் தர்க்க ரீதியான வளர்ச்சி பற்றிய கருத்துக்களுக்கு முரணாகவேயுள்ளது.

இன்று பல பெற்றோர்கள் பிள்ளைகளைப் போராட்டத்திற்கு அனுப்பிவைக்கிறார்கள்- பெற்றோர்களுடனே பிள்ளைகளும் போராட்டத்தில் இணைந்துள்ளார்கள். ஆனால் இங்கே இந்த இளைஞன் தன்னைத்தான் எப்படி இனங்காணுகிறான் என்பதையே சிந்திக்க வேண்டும். எத்தகைய பயணத்தின் இறுதியில் தன்னை இனங்கண்டு கொள்கிறான். என்பது கட்டாயமாக விபரிக்கப்பட்டிருக்க வேண்டும்.கருத்துக்களை சூழவே கற்பனைப்புனைவு விரிந்து செல்லவேண்டும் சொல்ல வரும் கருத்துக்களும் மிகத் திறனாக விபரிக்கப்பட வேண்டும். நாடகத்தின் சாரம் எதை நிகழ்த்துகிறான் என்பதில் தங்கியிருக்கவில்லை. எப்படி நிகழ்த்துகிறான் என்பதிலேயே தங்கியுள்ளது.

இன்று சந்தனக்காடு என்னும் இந்த நாடகம் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு வருகிறது. எல்லாக்காட்சிகளுமே அரங்கு நிறைந்த காட்சிகளாகவே அமைகிறது. இந்த நாடகத்தில் இடம் பெறும் கேலிப் பேச்சுக்கள் இன்று பல இளமட்டங்களின் பேச்சு வழக்கிலும் இழையோடுகிறது இவையாவும். புறநிலையில்; நாடகத்திற்குக் கிடைக்கும் வெற்றியாக அமையினும் அகநிலையில்; படைப்பாளியின் எண்ணம், எந்த அளவிற்கு இந்தப் படைப்பின் மூலம் நிறைவேறியுள்ளது என்பதையே இங்கு அவதானிக்கவேண்டும்.

படைப்பாளியிடம் மறைந்திருக்கும் சிறந்த ஆற்றல் இந்த நாடகத்துக்கூடாக வெளிப்படுகிறது. குறியீட்டு உத்தியில் கருத்துக்களை பரிமாறமுற்பட்டிருப்பது, இசை வழிவிவரணம், படிப்படியாக அதை வளர்த்துக் கொண்டு போகும் விதம், இவ்விசை வழி விவரணமூலம் இன்றைய சமுதாய சூழலை படிப்படியாக தர்க்க ரீதியில் பார்வையாளரைச் சிந்திக்கத் தூண்டுவது போன்ற சிறப்பம்சங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)


பெண்களே உங்களுக்கு, பெரியார்கள் பலருடைய சீரிய கருத்துக்களின் தொகுப்பு




சுகவாழ்வுக்கான அறிவுப் பிரசுரங்கள், வீட்டுத் தோட்டத்திற்கான விதைகள். அகத்திக்கன்று மற்றும் பெறுமதியான அன்பளிப்புகள் உங்களுக்குக் காத்திருக்கின்றன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில், 1992, மார்ச், 7, 8 ஆந் திகதிகளில் நடைபெறும்

**உள்ளூர் உற்பத்திப் பொருட்காட்சி**

''மில்க்வைற்'' விளம்பரக்காட்சியில் ரூபா. 50/-க்கு மில்க்வைற் உற்பத்திகள் வாங்கி அன்பளிப்புகளைப் பெறுங்கள்.

''மில்க்வைற்'', யாழ்ப்பாணம்.

[சி/4000]

## தமிழீழத் தேசிய நிர்மாணிப்பில்

# போக்குவரத்துப் பாதைகளும் சமூக - கலாசாரச் சிந்தனைகளும்

மு. திருநாவுக்கரசு

தேசிய சமூகம் என்பது மனித சமூகம் கண்ட வாழ்வு முறைகளுள் ஓர் உயர்ந்த கட்டம் ஆகும். தமிழ்மக்கள் ஒரு சிறப்பான தேசியக் கட்டுமானத்தைப் பல வழிகளிலும் நிர்மாணிக்க வேண்டி உள்ளது. மேலைத்தேசம் தேசியத்தைக் கடந்து அடுத்த கட்ட வாழ்நிலைக்குப் போயுள்ள சூழ்நிலையில் தேசிய நிர்மாணிப்பில் நாம் இன்றும் பின்தங்கியவர்களாகவே உள்ளோம். சிங்கள பௌத்தர்களுடன் ஒப்பிடுகையில் அவர்கள் பிரித்தானியஏகாதிபத்தியத்தைப்பயன்படுத்தியும் அதேவேளை தம்மியல்பாகவும் சிங்கள பௌத்த தேசிய சமூகம் ஒன்றிற்கான கட்டுமானத்தை பெருமளவு உறுதியாகவே போட்டுள்ளனர்.

தேசிய சமூக நிர்மாணத்தில் பொதுவாகமூன்றுவகைக்கட்டுமானங்கள் முக்கியமானவை. முதலாவது, பௌதீக-பொருளாதார ஒருங்கிணைப்பைக் கொண்ட அடிக்கட்டுமானம். இரண்டாவது, கலாசார ரீதியான ஒருங்கிணைப்புக் கட்டுமானம், மூன்றாவது; அரசியல் ரீதியான ஒருங்கிணைப்புக் கட்டுமானம்.

இம் மூன்றிலும் முதலாவதாக உள்ள பௌதீகக் கட்டுமானத்தையே இக்கட்டுரை மையப்படுத்துகிறது. சிங்கள பௌத்தர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கண்டிச்சிங்களவர் என்றும் கரையோரச் சிங்களவர் என்றும் பிரதானமான இரு கூறுகளாகப் பிளவு பட்டிருந்தனர். ஆனால் 19ஆம் நூற்றாண்டில் கண்டி-கொழும்பு பெருந்தெருக்களினாலும் புகையிரத வீதிகளினாலும் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இருபகுதிச் சிங்களவரிற்கிடையிலும், பிரதேச ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் ஒருங்கிணைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டாயின.

பிரித்தானியர் தமது ஏற்றுமதி இறக்குமதி உள்நாட்டு வர்த்தகத் தேவைகளின் நிமித்தம் உருவாக்கிய போக்குவரத்தும் தொலைத்தொடர்பு வசதிகளும் ஒருபுறம் முழுச்சிங்களப் பிரதேசத்தையும் ஒரு வலைப் பின்னலுக்குள் கொண்டு வந்தது. மறுபுறம் தமிழ்மக்களைக் கொழும்பில் தங்கியிருக்கச் செய்தது. இதில் இரண்டு விடயங்கள் தெளிவாக அவதானிக்கப்பட வேண்டும். ஒன்று. ஒருபுறம் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள பௌத்தத்திற்கான அடிக்கட்டுமானம் இடப்பட்டது. இரண்டு தமிழ்பிரதேசங்களிற்கிடையில் (யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு) வீதிப்போக்குவரத்து இணைப்புக்கள் ஏற்படுத்தப்படாமையுடன் மறுவளமாக சிங்களபௌத்த தலைநகரை நோக்கி தமிழர்களைத் தங்கியிருக்கச் செய்தது. எனவே தமிழர்களைப் பொறுத்தவரை இருவகைப் பாதிப்புக்களிற்கு இப் பௌதீகக் கட்டுமானம் வழிவகுத்தது எனலாம்.

இந்நிலையில் அதிகசிரத்தையோடு கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ஒரு பகுதி வடக்கு-கிழக்குக்கு இடையிலான பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் நிர்மாணமும் தொலைத்தொடர்பு அமைப்புக்களும் ஆகும்.

பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் என்பன தேசிய வாதத்தில் ஓர் அங்கமாகும். பிரதேச இணைப்பையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் இவை உருவாக்குகின்றன. கைத்தொழில் வளர்ச்சி, வர்த்தகம், பண்டப்பரிவர்த்தனை என்பவற்றிற்கான தேவையின் பொருட்டு இத்தகைய வீதிப் போக்குவரத்து உருவாகின. ஆனால் இவற்றின் விளைவு தேசியத்தன்மையை பிறப்பிக்கின்றது. வீதி மற்றும் போக்குவரத்து இணைப்பில்லை என்றால் பிரதேச ஒருமைப்பாடில்லை. பிரதேச ஒருமைப்பாடில்லையென்றால் தேசியம் இல்லை. இந்த வகையில் தேசியநிர்மாணிப்பில் போக்குவரத்து. தொலைத்தொடர்பின் முக்கியத்துவம் சரியாகவே உணரப்படவேண்டிய ஒன்றாகும்.

இன்றைய இந்தியாவின் ''இந்திய தேசியம்'' என்பது அதன் போக்குவரத்து, தொலைத்தொடர்பு கட்டுமானத்திலேயே அத்திவாரம் இடப்பட்டுள்ளது. பிரித்தானியர் இந்தியாவை ஆதிக்கம் செய்த காலத்தில் அங்கு தமது கைத்தொழிற் தேவையின் பொருட்டும், மூலப்பொருள்களை நகர்த்தலின் பொருட்டும் கைத்தொழிற் பண்டங்களை விற்பனை செய்தற் பொருட்டும், மற்றும் வர்த்தக, இராணுவ நோக்கங்களையிட்டும்பெருந்தெருக்களாலும் புகையிரத வீதிகளாலும் முழு இந்தியாவையும் வலைப் பின்னல் போல பின்னி இணைத்துத்தை தக்கவைத்திருக்கும் ஒரு பிரதான அம்சமாகவும் அவை காணப்படுகின்றன.

இத்தகைய ஒப்பீட்டு உதாரணங்களின்மத்தியில்ஈழத்தமிழ் மண் பிரதேசரீதியாக போக்குவரத்து அமைப்பால் ஒன்றிணைக்கப்படாதிருக்கும் சோகத்தை துல்லியமாக விளக்குதல் சாத்தியமாகும். பிரித்தானியரைப் பொறுத்த வரையில் வடக்கு-கிழக்கை வீதிப் போக்குவரத்தால் இணைக்க வேண்டிய பொருளாதாரத் தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. சிங்கள ஆட்சியாளரைப் பொறுத்த வரையில் வடக்கு-கிழக்கு போக்குவரத்து ரீதியாக இணைக்கப்படாதிருப்பது அவர்களினது சிங்கள - பௌத்த ஆதிக்கத்திற்கு சாதகமானது. எனவே அவர்கள் அவ்வாறான வீதி, மற்றும் போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்யத்தயாராய் இருக்கவில்லை.

செயற்பாடுகளை வளர்த்தெடுக்க வேண்டும். தேசியம் என்பது சமூக ஒருமைப்பாடாகும். பொதுவாக அறிவியற்றுறை சார்ந்தோரும். பத்திரிகைகளும், மற்றும் கலை, இலக்கியப் படைப்புக்களும் இத்தகைய தமிழ்த் தேசிய கலாசார நிர்மாணிப்பில் பெரும் பங்கு வகிக்கலாம்.

புதிய கருத்துக்களைப்பரந்துபட்ட மக்களுக்குக் காவிச் செல்வதிலும், ஒரு புதிய சமூக உருவாக்கத்திற்கு மக்களைத் தூண்டுவதிலும், அதற்கேற்ப மக்களை வழிநடத்துவதிலும் பத்திரிகைகளுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. பல்பரிமாணத்திலும் தமிழ்த் தேசிய சமூகத்தை நிர்மாணிப்பதில் பத்திரிகைகள் போதியளவு செயற்பட வேண்டியவைகளாகும். கொழும்பிலிருந்து தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவருமிடத்து அவை தமிழ்த்தேசியத்தைப் பொதுவாக பிரதிபலிக்க மாட்டார்கள். பல்வேறு பட்ட இன, மத, மொழிகளையும், பிராந்திய வேறுபாடுகளையும் கொண்ட இந்தியாவை மேற்கூறிய போக்குவரத்து அமைப்புக்கள் பிரதேச ரீதியாக ஒருமைப்படுத்தியது இதனால் பல்வேறு இன மத, மொழி மக்கள் இருந்தும் பிரதேச ரீதியான ''இந்தியத் தேசிய வாதம்'' தோன்றுவது சாத்தியமாயிற்று.

இத்தகைய பௌதீக ரீதியான அடிக்கட்டுமானத்தால் இந்திய தேசிய வாதம் வலுவடைந்த அளவுக்கு சமூக-கலாசார அம்சங்களால் அது நிர்மாணிக்கப்படவில்லை என்றே கூறலாம். அதாவது தேசிய வாதத்தில்மக்கள்தம்மிடையே ஒருமைப்பாட்டைஉணரவேண்டுமே தவிர சாதி பிரதேச, வட்டார வேறுபாடுகள் தலைதூக்கவே கூடாது. இவை சமூக ஒருமைப்பாட்டை சீரழிக்கும் தேசியவாதத்திற்கு எதிரான அம்சங்களாகும். தேசியத்திற்குரிய சமூகப் பண்பாட்டைஇந்திய சமூகம் இன்னும் அடைய வில்லை என்றே கூறலாம்.

பௌதீக ரீதியான போக்குவரத்து கட்டமைப்புக்களாலும், முதலாளித்துவ பொருளாதரக் கட்டமைப்பினாலும், அந்நியப் படையெடுப்பு- சீன, பாகிஸ்தானிய அபாயம்-என்பவற்றினாலும் தான் இந்திய தேசியம் என்ற கட்டுமானத்தையும், அதற்கான எண்ணத்தையும் பேணமுடிகின்றதே தவிர சமூக-கலாசார ரீதியில் இந்திய தேசியம் நடைமுறையில் இல்லாமல் சிறுவட்ட வட்டாரப் போக்கே உள்ளது.

அப் படியாயின் இந்தியாவில் கலாசாரரீதியிற் தோல்வியடைந்த இந்திய தேசிய வாதத்தை வீழவிடாமற் தாங்கிப் பிடித்திருக்கும் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக இந்த வீதிப் போக்குவரத்தும் மற்றும் தொலைதொடர்பு அம்சங்களுமே உள்ளன என்றுதுணிந்து கூறலாம்.

இலங்கையில் சிங்கள-பௌத்தர் மத்தியில் ஒரு சிங்கள-பௌத்ததேசியவாதத்திற்கான பிரதேச ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் வீதி, மற்றும் போக்குவரத்து தொலைத்தொடர்பு வசதிகள் பெரும் பங்கு வகித்தது போலவே இந்தியாவிலும் பிரதேச ரீதியில் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் வீதி, மற்றும் போக்குவரத்து வசதிகள் பெரும் பங்கு வகிப்பதுடன் தேசியவாதத்திற்குரிய ஏனைய சமூக-கலாசார அம்சங்கள்வளராத நிலையிலும் தேசியவாத

ஆனால் தமிழ்த் தேசிய சிந்தனையின் பொருட்டு ஆக்கபூர்வமான வகையிற் சிந்திக்க வேண்டிய பொறுப்பு தமிழர் பக்கமே இருந்தது 1950களின் மத்தியில்தமிழர் பக்கம்மொழி உணர்வு பெருமளவுக்குத் தென்பட்டதே தவிர தமிழ்த் தேசிய உணர்வு சிந்தனாபூர்வமாக போதியளவு உருப்பெறவில்லை என்றே கூறலாம். தேசியம் என்பது முழுமையான சமூக வாழ்வு பற்றிய எண்ணக்கருவும் ஒரு நடைமுறையும் என்பதை சிந்தனாபூர்வமாக போதியளவு அன்று நிலைநாட்டவில்லை என்றே கூறலாம்.

தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவது வகுப்புவாதம் என்று முத்திரை குத்தி இழிவான பார்வைக்குட்படுத்தும் காலம் அது. இப்படிப்பட்ட ஒருகால கட்டத்தில் சு. வித்தியானந்தன் (பின்பு பேராசிரியர்) போன்ற ஓரிரு புத்திஜீவிகள் தமது முதுகெலும்பை நிமிர்த்தி மொழி உரிமைக்காகக் குரல்கொடுத்தனர்- சு. வித்தியானந்தனின் பிற்கால வாழ்வும் செயல்களும் விமர்சனத்திற்கு உரியவையாயினும் 1950களின் சூழலில் அவரது பங்களிப்பை உரியவகையில் ஏற்று மதிப்பீடுசெய்ய வேண்டும். சு. வித்தியானந்தனின் பார்வை மொழிரீதியானதாக இருந்ததே தவிர அவரிடம் தமிழ்த் தேசியக்கண்ணோட்டமோ அதற்கான கருத்தாக்கமோ போதியளவு இருக்கவில்லை. பொதுவாகச் சிந்தனைத் துறையின் தமிழ்த்தேசியம் பற்றிய எண்ணக்கரு வரண்டே இருந்ததெனலாம். இந்நிலையில் முதன்மையளிக்கப்படாத தொன்றாய் இந்த வீதிப்போக்குவரத்து பற்றிய அம்சமும் இருந்தது.

மேலும் இன்றைய சூழலில் சமூக - கலாசார ரீதியாக தமிழீழத் தேசியம் பல்முனைகளிலும் முனைப்புப்பெற வேண்டும். இதற்கென சிந்தனை விழிப்பும் பண்பாட்டு மாற்றமும் ஏற்படவேண்டும். குறுகிய வட்டார, பிரதேச, பிராந்திய, சாதிவேறுபாடுகளும், மற்றும் குழுமனப்பான்மை கொண்ட காழ்ப்புணர்வுகளும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்து முற்றாகக் களையப்பட்டு ஒருமைப்பாடு மிக்க ஒரு தமிழ்த் தேசிய அலகாக இந்த மக்களை உருவமைப்பதற்குரிய

டாது- ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பத்திரிகைகள் கிழக்கை தமது இலக்காகக் கொண்டவைகளல்ல இவற்றின் பிரதான மையம் குடாநாடுதான். இதில் நடைமுறை ரீதியான சிக்கல்களும் உள.

தமிழ்த் தேசியத்தை நிறைவாக்குவதற்கேற்ற புதிய மார்க்கங்களையும், புதிய வழிவகைகளையும் கண்டறிந்து அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்க முயல்வதுடன் மாறி வரும் உலகின் புதிய போக்குகளுக்கு ஏற்ப புதிய பொருத்தமான சிந்தனைகளைத் தமிழ் மக்கள் கண்டறியவோ அன்றி உருவாக்கவோ வேண்டும் நவீன மாற்றங்களை விஞ்ஞான-தொழில்நுட்பரீதியிலும். சமூக, சிந்தனா ரீதியிலும் விரைவாகவே உள்வாங்கிக் கொள்ளும் பழக்கம் பொதுவாக ஆகிய சமூகங்களின் பௌத்த சமூகத்தவரிடம் அதிகம் போல் தெரிகின்றது. வரலாற்றை அவதானிக்கும் போது மேலெழுந்த வாரியாக இப்படி ஒரு கருதுகோளுக்கு வரமுடிகின்றது பௌத்த நாடாகிய சீனர் நவீன சிந்தனையாகிய மாக்ஸிஸத்தை விரைவாக உள்வாக்கியது. அவ்வாறு பௌத்த நாடாகிய ஜப்பான் நவீன முதலாளித்துவ முறையை விரைவாக உள்வாங்கியது. ஜப்பானியர்கள் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கமற்றவர்கள். ஆனால் மேலைத்தேசத்தின் வரவால் அங்கு மாட்டு இறைச்சி 19ஆம் நூற்றாண்டிற் புகுந்தது. மாட்டிறைச்சி உண்பது பௌத்த தர்மத்திற்கு முரண் என நம்பி வந்தார்கள். ஜப்பானிய உயர்குழாத்தினர் இதனைப் பற்றி ஆலோசித்துவிட்டு இறுதியில் மேஜி மன்னன் மாட்டு இறைச்சி உண்பதாகவும், மக்களை அவ்வாறே உண்ணுமாறும்அறிவித்தார்கள். இதன் பின்பு மாட்டிறைச்சியை உண்ணுவது ஒரு சாதாரண வழக்கமாகியது. இப்படி மிக விரைவில் பௌத்த சமூகத்தவர்கள் மாற்றங்களை ஏற்பது சுலபம்- இவ்வாறே தீவிர மாற்றமாகிய இடதுசாரி மாற்றப்பாதையில் வியற்நாமையும், மேலைத் தேசங்களின் கலாசாரச் சீரழிவுகளை விரைவாக உள்வாங்கியதில் கொங்கொங், தாய்லாந்து போன்றவற்றையும் குறிப்பிடலாம். எப்படியோ பௌத்த சமூகத்தவரிடம் மாற்றங்களை உள்வாங்குகின்ற ஒரு சிறப்பான அம்சமுண்டு இந்தியாவும், பல இஸ்லாமிய நாடுகளும் விஞ்ஞானம் -தொழில்நுட்பம் போன்ற அம்சங்களில் பல நவீனத்துவத்தை உள்வாங்குகின்றவாயினும் சமூக - சிந்தனா ரீதியில் அவை மிதமானவைகளாகவே உள்ளன. இது ஒரு கலாசார வெளிப்பாடு. இத்தகைய கலாசார அம்சங்கள் விரைவான மாற்றத்தைப் பெறவேண்டும்.

ஒப்பீட்டுரீதியில் தென்னாசியப் பிராந்தியத்தில் தென்னிலங்கை அதிக நவீனமயமாக்கலைப் பெற்றுள்ளது. இன மேலாதிக்க சிந்தனையைத் தவிர சிங்கள - பௌத்தர் ஏனைய விடயங்களில் மற்றைய பௌத்தர்களைப்போல நவீன போக்குக்களை இலகுவாக உள்வாங்குகிறார்கள். தமிழ் மக்களும் உலகத் தரத்தில் தம்மை நிலைநிறுத்தக் கூடிய வகையில், உலகிலுள்ள எந்தவொரு அரசும் எம்மீது மேலாண்மை செலுத்தமுடியா பாதுகாக்கக் கூடியவகையில் எமக்குப் பொருத்தமான ஒரு பாதையில் எமக்கெனச் சிறப்பான தேசிய அம்சங்களை நிறைவுசெய்து அடுத்து வளர்ச்சிக்கும் எம்மைத் தயார்படுத்தக் கூடிய வகையில் இன்றைய தேசிய வாழ்வை ஒழுங்கமைக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

## கல்விப் பணிப்பாளருக்கு ஆசிரிய மாணவர் நன்றி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வர்த்தக மாணவர் மன்றத்தினர் ஊர்வலமாகச் சென்று யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கு தமது நன்றியறிதல் மகஜரைக் கையளித்தனர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் இவ் வருடம் வர்த்தகநெறி புதிதாக ஆரம்பிக்கப்பட்டு அதிக ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமைக்காகவே இம் மாணவர்கள் சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்று நேற்று முன்தினம்மாலை 4.00 மணியளவில்கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து மேற்படி மகஜரைஅவரிடம் கையளித்தனர்.

அத்துடன் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் நடராசா அவர்கட்கும் கலாசாலை ஆசிரிய மாணவர் மன்றத்திற்கும் இம் மன்றம் தமதுநன்றியைத்தெரிவித்தது.

## தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்டத்தில் பொது நிறுவனங்கள், சமூக சேவை நிலையங்களில் ஆர்வம் கொண்டு உழைத்து வருபவர்களுக்கு தலைமைத்துவம் பற்றி பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பிரதேச சபைகள் மட்டத்தில் அரசியல், சமூக பொருளாதாரத் தலைமைத்துவம் கொண்டபிரதேசசபைத் தலைமைத்துவம் பற்றிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# கிளிநொச்சியில் இரு தினங்கள் தமிழீழப் பெண்கள் மாநாடு

## விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி ஏற்பாடு

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்தில் நாளையும், நாளை மறுதினமும் தமிழீழப் பெண்கள் மாநாடு நடத்தப்படவுள்ளது.

முதல் நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை ஒன்பது மணிக்கு செல்வி ஜெயா அவர்களின் தலைமையில் ஆரம்பமாகும். நாளைய நிகழ்ச்சியில் மாவீரர் நினைவஞ்சலி, 1990 ஆம் ஆண்டு மாநாட்டில் கலந்துகொண்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட தோழிகளுக்கான விசேட நினைவஞ்சலி என்பன இடம்பெறும். அத்துடன் மாநாட்டின் நோக்கங்கள்,குறிக்கோள்கள் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறுவதுடன், அவை தொடர்பானதிருத்தங்கள்நிறைவேற்றப்படும். அன்றிரவுகலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில். முதல்நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்புரை, தலைவரின் செய்தி, பிரதித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா அவர்களின் உரை என்பவற்றுடன் மாநாட்டுத் தீர்மானங்கள்தொடர்பான விளக்கமும், தீர்மானங்கள் நிறைவேற்றலும் இடம்பெறும்.

### காங்கேசன் துறைமுகம்

# முயற்சி வெற்றி பெற்றால் தினமும் 10 லொறிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையூடாக உணவுப் பொருள்கள் எடுத்து வரும் பரீட்சார்த்த முயற்சி நாளை வெற்றியளிக்கும் பட்சத்தில் திங்கள் முதல் நாளாந்தம் பத்து லொறிகள் இதற்குப் பயன்படுத்தப்படும் என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நாளை முதல்தடவையாக நான்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க லொறிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளமை தெரிந்ததே. இந்த லொறிகளுக்குப் பாதுகாப்பாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரிகள் மூவர் மூன்று வாகனங்களில் செல்லவுள்ளனர். (ச, 75)

# மனிதஉரிமைகுறித்து ஆராய ஐ.நா. அதிகாரிகள் வருவர்

[கொழும்பு]

சிறிலங்காவின்மனிதஉரிமைகள் தொடர்பாக நிலைமையை ஆராயவென ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த ஆண்டு இறுதியில் விஜயம் செய்ய உள்ளனர்.

மனிதஉரிமைகளைப் பேணுவதற்கென அவர்களால் பல திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தத்தகவலை சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# ஆணைக் குழுவில் நம்பிக்கையில்லை

(யாழ்ப்பாணம்)

அடிப்படை மனித உரிமைகள் மீறலைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்திற்கு சிங்களத்தில் அனுப்பிய கடிதத்திற்கு சங்கம் தனித் தமிழில் பதிலனுப்பியுள்ளது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றியே சிங்களக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்கும், ஓரங்கட்டுதலைத் தடுப்பதற்காகவும் அரசினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை.

இவ்வாறு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரினால் தனித் தமிழில் எழுதப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வி

திற்கீகத்தான் எம் மக்களுக்குத் தேவையற்ற விடுமுறை நாட்களில் பாடசாலை நடாத்த வேண்டும் என்ற ஒருமித்த கருத்து தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு 'பாலம்' மக்கள் பொதுப்பணிமன்றத் தலைவர் அருட் திரு ஆ. சிங்கராயர் அ. ம. தி அவர்கள் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் விடுமுறை நாட்களில் பாடசாலைகளை நடாத்துவதில் எவ்வித அரசியல் இலாபமும் இல்லை. அத்துடன் விடுதலைப் புலிகளால் இந்தப் பாடசாலை நாட்கள் திணிக்கப்பட்டது என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது எனப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பண்டிதர்

வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பில் 600 குடும்பங்களுக்கான குடியிருப்புவசதிகளும், பாலர் பாடசாலை, சமூகக்கூடங்கள், ப.நோ கூ. சங்கக் கட்டடங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

இக்குடியிருப்பை அமைப்பதற்குத் தேவையான நிதியில் எழுபத்தைந்துவீதத்தை யாழ் செயலகப் புனர்வாழ்வுப் பிரிவும், மிகுதி இருபத்தைந்து வீதத்தைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் செலவிட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாகக் கல்வி வாய்ப்பில்லாதிருந்த மாணவர்கள் நலன்கருதி இப்பாடசாலைக்கான வசதிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்துவருவதுடன், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

யாழ்.அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர், யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் உட்பட அரச திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்ட இவ்விழாவில் பாடசாலையை யாழ். அரசாங்க அதிபர் திறந்துவைத்தார். (ச)

### சந்தனக்காடு

(6 ஆம் பக்கம் தொடர்ச்சி)

படைப்பாளருக்குரிய சிறந்த ஆற்றல்களாக அவதானிக்கத் தக்கவை. (கோரஸ் முறையில் விவரணம் இசை அமைந்திருப்பின் மேலும் பொலிவுற்றிருக்கும்) ஒரு சிறந்த நாடக ஆக்கத்திற்குரிய சமூக நோக்கும், பன்முகப் பார்வையும் படைப்பாளியிடம் மேலோங்கி நிற்பதும் தெரிகிறது.

மனநோயாளர், முடவன், குருடன்,செவிடன்ஆகிய பாத்திரங்களை ஏற்று நடிக்கும் கலைஞர்கள் தங்களது ஆற்றலை செழுமைப்படுத்தவேண்டும். நாடகம் பற்றிய புதிய தேடல்கள் மூலம் தங்களது வெளிப்பாட்டுத் திறனைமெருகூட்ட வேண்டும். இவர்களிடம் ஆற்றல்கள் நிறைய இருக்கின்றன.

நவீன நாடகம் பற்றிய பிரக்ஞை வளர்த்துக்கொண்டிருக்கும் புறச்சூழலுடன் இவர்களும் இணைய வேண்டும்.காலத்திற்கு கட்டாயமான தளைநீக்கத்திற்குரிய பண்பாட்டு வேலைப்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குழுக்களாகவும் நிற்காது, ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவேண்டும் ஒருவரில் இருந்து ஒருவர் பெற்றுக் கொள்ளவும், படித்துக் கொள்ளவும் நிறைய இருக்கின்றன.

நாடக கலைஞர்களெல்லோருமே இன்றைய காலகட்டத்தில் பண்பாட்டு வேலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டுள்ளது மனங்கொள்ளத்தக்கது மக்கள் மனங்களில் புரட்சியைத் தூண்ட வேண்டும்.அவர்களை ஒரு திரளாக எழுச்சி கொள்ள வைக்க வேண்டும் என எண்ணி செயற்படும் கலைஞர்கள் அதற்குரிய சரியான அரங்கு பற்றி சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள் முற்றிலும் புதிய நடிப்பு முறையைக் கொண்ட விடுதலைக்கான அரங்கினால் மட்டுமே உணர்விழந்துகிடக்கும் மனிதரை உயிர்த்தெழ வைக்க முடியும். தமது வெளிப்பாட்டுத் திறனால் பார்வையாளரை தம்முடன் பாதித் தூரம்வரை இட்டுச் செல்லத்தக்க, புதுவகை நடிகர்களையே இன்றைய விடுதலைக்கான அரங்கு கோரி நிற்கிறது.

-சங்கரன்

### அகோர

தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த சிறிலங்கா விமானப் படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் புலிகளின் நிலைகள்மீது பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இதேவேளை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சும் இடம் பெற்றது. இருப்பினும், விடுதலைப் புலிகளின் படையணியினர் தொடர்ந்தும் இராணுவத்தினர்மீது உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர்.

காலை ஆரம்பித்த இந்த மோதல் பிற்பகல் 3.00 மணி வரை தொடர்ந்தும், இடையிட்டும் நடைபெற்றது.

### வெளிவந்த

புலிகள் வெளியேறிய இராணுவத்தினரை வழி மடக்கி நடத்திய உக்கிர தாக்குதலில், அந்த இராணுவ அணி சிதறியது இறந்த தமது சகாக்களின் சடலங்களையும் விட்டுவிட்டு ஓட்டம் எடுத்தது.

இந்த உக்கிர மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின்எண்ணிக்கை இருபத்தியொன்றுக்கும் அதிகமானதெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமெனக் குறிப்பிடுகின்றன. இம் மோதலில், பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

### அராலி

இத் தாக்குதல்களால் திரு. க. ஞானசம்பந்தன், திரு. க. பரமகுரு ஆகியோரின் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள வேறு சில வீடுகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. (20)

### கிராமசேவையாளர்

ணப்பிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ள போதும் இவர்கள் இதற்காக எதுவித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.முன்னர் விண்ணப்பிக்காது புதிதாக விண்ணப்பிப்போர் உரிய கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிப்பது தொடர்பான முழு விபரங்களும் இதுவரை யாழ் செயலகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை எனவும் கிடைத்ததும்உடனடியாக விளம்பரப் படுத்தப் படும்எனவும்அரசஅதிபர்தெரிவித்தார்.

இதனால் இம் மாதம் பத்தாம் திகதி என அறிவிக்கப்பட்ட இதற்கான முடிவுத் திகதியை மேலும் சிலநாட்களுக்கு நீடிக்குமாறு அரச அதிபர் அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் இப்பதவிக்கான போட்டிப் பரீட்சை ஏப்பிரல் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சிங்க இலச்சினையுடன் போட்டி அழைப்பிதழ்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டி அழைப்பிதழ் சிறிலங்கா அரசின் சிங்க இலச்சினை பொறித்து அனுப்பப்பட்டுள்ளது.

உடற்கல்வி உதவிப் பணிப்பாளர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட இந்த அழைப்பிதழில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். மாவட்ட உடற்பயிற்சி போட்டி - 1992 இல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். திருமதி தே. சுந்தரலிங்கம் பரிசில் வழங்குகிறார்.

# நேற்றைய ஆட்டத்தில் தென்ஆபி.,பிரிட்டன்வெற்றி

அவுஸ்ரேலியாவில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டியில் இங்கிலாந்து அவுஸ்ரேலியாவைஎட்டுவிக்கெட்டுகளால் தோற்கடித்துள்ளது.

அவுஸ்ரேலியா 49ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி 40. 5 ஓவர்களில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்களைபெற்று வெற்றிபெற்றது

நியூசிலாந்தில் நடைபெற்ற மற்றுமோர் போட்டியில்தென்னாபிரிக்க அணி மேற்கிந்திய தீவுகள் அணியை 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்களையும் மேற்கிந்திய தீவுகள் அணி 34.4 ஓவர்களில் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 136 ஓட்டங்களையும் பெற்றன.

# விளையாட்டு அபிவிருத்திக் குழு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்றும் கழகங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ச)

### துப்பாக்கிச் சூடு

நேற்று காலை 8.30 மணியளவில் மண்டைதீவு,சிறிலங்கா இராணுவ,ம் மக்கள் குடியிருப்புகளைநோக்கிதுப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்தது.

# மரண அறிவித்தல்

## எஸ். கே. சண்முகநாதன்

(உடுவையூர் சண்)

வண்ணை வடமேற்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், உடுவில் மல்வம் வாசியுமான திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் (உடுவையூர் சண்) அவர்கள் காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், கலையரசியின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பவளம் ஆகியோரின் அன்புப் புதல்வனும், பரமநாயகி, கிளியம்மா, மனோகரன், யோகநாதன் (வண்ணைக் கவிஞன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற அப்புத்துரை, மரியம்மாவின் மருமகனும், சுப்பிரமணியம், இந்திராணி ஆகியோரின்மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-3-92 வெள்ளிக்கிழமை (இன்று) பி. ப. 2.00 மணிக்கு மல்வம் உடுவில் திருத்தணிகை இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் இறுதிச்சடங்குகள் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

(சி 2267) மனைவி, சகோதரர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.